Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
வங்கிக் கணக்கு தேவையில்லை.
தரகு (Commission) ஏதுமில்லை.
எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472
(சி/2228)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 16 (07.04.2004) புதன்கிழமை இதழ்:189

## பதினெட்டாவது பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்பு!



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைக்கவிருக்கும் புதிய அரசின் பிரதமராக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றார்.

நேற்று காலை 11.27 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் வைபவ ரீதியாக பதவியேற்பு வைபவம் இடம்பெற்றது.

இந்த பதவியேற்பு நிகழ்வில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் முக்கியஸ்தர் நந்தன குணவர்த்தன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், கலந்துகொண்டனர். பதவிப்பிரமாணம் செய்ததை அடுத்து- பிரதமர் ராஜபக்ஷ புதுக்கோட்டையிலுள்ள தம்புத்தலேக விகாரைக்குச் சென்று மத வழிபாட்டில் ஈடுபட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமராக முன்னர் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை நியமிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருந்த போதிலும் அவர் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை சந்திரசேகரன், மனோகணேசன் சந்தித்துப் பேச்சு!



கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ.சந்திரசேகரன் நேற்றுக்காலை 10 மணியளவிலும், மேல்மாகாண மக்கள் முன்னணி தலைவர் மனோ.கணேசன் நேற்றுமாலை 5 மணியளவிலும் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

புதிய அரசாங்கம் அமைக்கப்படும் நிலையில் கட்சிகளின் நிலைப்பாடு மற்றும் கொழும்பிலுள்ள அரசியற்சூழ்நிலை தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக இருவரும் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

சந்திப்பு தொடர்பாக சந்திரசேகரன் மேலும் தெரிவித்ததாவது,

'முக்கியமாக தற்போது இருகின்ற அரசியல் சூழ்நிலை,எத்தகைய நிலையை தமிழீழ விடுதலைப்புலிகள் எடுக்கின்றார்கள் என்பதை நேரடியாக கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பது என்னுடைய ஆர்வமாக இருந்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் செயற்பாடுகள் தொடரும் அதேவேளை

# இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் இந்தியாவின் பங்களிப்பும் அவசியமானது!

### புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இந்தியா, தனது காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும். அத்துடன் - நோர்வே மேற்கொண்டு வரும் சமாதான முயற்சி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.**

**இவ்வாறு - புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்தார். இலங்கையின் 18 ஆவது பிரதமராகப் பதவியேற்றபின் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

எமது அரசாங்கம், சிறுபான்மையானது என எவரும் அச்சமடையத் தேவையில்லை. நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்கக் கூடிய ஆதரவு எம்மிடம் உள்ளது.

இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான இனப்பிரச்சினை தொடர்பான பேச்சு வார்த்தையில் நோர்வே அரசாங்கம் சம்பந்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் - இதில் இந்தியாவும் தனது காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும் என, நாம் எதிர்பார்க்கின்றோம். இந்தியாவை நாம் பங்களிக்கச் சொல்வதனால் நோர்வேயின் பணி இங்கு முடிந்துவிட்டது என அர்த்தமல்ல.

அத்துடன்- இலங்கை விவகாரத்தில் இந்தியா எப்பொழுதும் ஒரு பங்களிப்பை வகிக்க வேண்டும் என, நான் கருதுகின்றேன். இவ்விடயத்தை, 1990 ஆம் ஆண்டிலிருந்தே நான் கூறி வருகின்றேன். இந்தியா எமது சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டால், சமாதானம் தொடர்பாக நல்லதொரு முடிவை அடைய முடியும்.

நோர்வே தற்போது வகிக்கும் பாத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பிரதமர் ராஜபக்ஷவை இந்திய தூதுவர் சந்தித்தார்!

(கொழும்பு)

இலங்கையின் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதும், கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் நிருபம் சென்னைச் சந்தித்து உரையாடினார்.

இலங்கையின் 13 வது நாடாளுமன்றத் தேர்தலில், அறுதிப் பெரும்பான்மையை பெற்றிருக்காத போதிலும் மக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பினரே ஆட்சி அமைக்க வேண்டி ஏற்பட்டதையடுத்து நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார்.

இதனையடுத்து அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளிடம் சென்று பௌத்த சமய முறைப்படி வழிபாட்டில் பங்கு கொண்ட பின்னர், நேற்று மாலை கொழும்பிலுள்ள தனது வாசஸ்தலத்தில் வைத்து இந்தியத் தூதுவர் நிருபம் சென்னைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில்- இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான இராஜ தந்திர உறவுகள், மற்றும் எதிர்காலத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமது கட்சி தொடர்பான அமைச்சு விபரங்களை ஜே.வி.பி வெளியிட்டது!

புதிய நாடாளுமன்றத்திற்கான தனது கட்சியின் சார்பாக அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்பவர்களின் பெயர்களை ஜேவிபி நேற்று வெளியிட்டது.

மஹிந்த ராஜபக்ஷ தனது புதிய நாடாளுமன்றத்தின் அமைச்சர் பதவிகள் தொடர்பாக தகவல்களை அறிவிக்கும் முன்னரே ஜேவிபி தன்னிச்சையாக 4 அமைச்சர் பதவிகளையும் 4 பிரதி அமைச்சர் பதவிகளையும் தங்களது அமைச்சுக்களாக அறிவித்துள்ளதுடன் அவர்களின் பெயர்களையும் வெளியிட்டுள்ளது.

இதன்படி காணி மற்றும் விவசாய அமைச்சராக அநுரா திஸநாயக்கவும் கடல்வள அமைச்சராக சந்திரசேன விஜயசேனவும் கலாசார (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சியின் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது!

### மட்டு-அம்பாறை எம்.பிக்களும் பங்கேற்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்றக் குழு நேற்றுக் கொழும்பில் கூடி சமகால அரசியல் நிலைகுறித்து ஆராய்ந்துள்ளது.

இலங்கைத்தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டில் நடைபெற்ற கூட்டத்திலேயே சமகால நிலை குறித்து கலந்துரையாடப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 20 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்றக் குழுத்தலைவராக இரா சம்பந்தனும் உதவித்தலைவராக மாவை சேனாதிராஜாவும் நாடாளுமன்றக் குழுவின் கொரடாவாக செல்வம் அடைக்கலநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இச்சந்திப்பில் மிகமுக்கிய விடயமாக கிழக்கு மகாணத்தில் தலையெடுத்திருக்கும் பிரச்சினையை அனைவரும் ஒன்றிணைந்து தீர்ப்பதென இணக்கம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பு இரு அமர்வுகளாக இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna @ expoavi. com, reservations @ expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# பணத்துடன் ஓடிய திருடன் பொலிஸாரிடம் பிடிபட்டான்

## சங்கானையில் திங்கள் இரவு சம்பவம்

ஒரு லட்சம் ரூபா பணத்தை திருடிவிட்டுத் தப்பியோடிய திருடன் எதிர்பாராத விதமாக பொலிஸாரிடம் மாட்டிக்கொண்ட சம்பவம் ஒன்று சங்கானைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஒரு மணியளவில் சங்கானை தேவாலய வீதியில் உள்ள கருணாநிதி என்ற வர்த்தகரது வீட்டின் யன்னல் கம்பிகளை வளைத்து உட்புகுந்த திருடர்கள், அங்கிருந்த சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பணத்தைக் கொள்ளையிட்டுள்ளனர். அவ்வேளை ஆள் அரவம் கேட்டு விழித்துக்கொண்ட வீட்டார் திருடனைத் துரத்தியவேளை திருடர்கள் திசைக்கு ஒருவராக ஓடியுள்ளனர்.

அவ்வேளை, சங்கானை தேவாலய வீதிப் பகுதியில் ரோந்து வந்துகொண்டிருந்த பொலிஸார் திருடன் ஒருவன் ஓடுவதைக் கண்டு துரத்திச் சென்று மடக்கிப் பிடித்துள்ளனர்.



உடைக்கப்பட்ட யன்னல் கம்பி

அவ்வேளை திருடன் கூரிய ஆயுதங்கள் மற்றும் ஒரு தொகைப் பணம் முதலியவற்றை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது.

பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகள் மூலம் அத்திருடர் குழு பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளதாகவும், அக்குழுவில் பலர் அங்கம் வகிப்பதாகவும் தெரியவந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். தொடர்ந்தும் அத்திருடன் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. (ப)

# சின்னஞ்சிறு செய்திகள்

### தலைக்கவசம் அணிய காவல்துறை பணிப்பு

வன்னிப் பிரதேசத்தில் தலைக்கவசம் அணியாது வீதிகளில் மோட்டார் சைக்கிள்களை ஓட்டுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என, தமிழீழ காவல்துறை வீதிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நடைமுறை இம்மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (122)

### 725 பாடசாலைகளில் நூலக வசதி

(ஆழியவளை)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் 725 பாடசாலைகளில் நூலக வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

'பொப் லெப்' திட்டத்தின் கீழ் இந்த வசதிகள் செய்துகொடுக்கப் படவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (122)

### சலன சித்திர நிர்வாகக் கூட்டம்

திரைக்கலை சங்கங்களின் சம்மேளனமான சலன சித்திரம் அமைபபின் யாழ்.மாவட்ட நிர்வாகிகளுக்கான கூட்டம் - எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு மாவட்ட தலைவர் வி.எஸ். சிவநேசன் தலைமையில் கொடிகாமம் கரவெட்டியிலுள்ள சம்மேளனக் கிளைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட நிர்வாக உறுப்பினர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு பொதுச்செயலாளர் கேட்டுள்ளார்.

### நெடுந்தீவு விநாயகர் மகோற்சவம்

நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 12 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 13 ஆம் திகதி புதுவருடப் பிறப்பன்று மு.ப 10 மணிக்கு ரதோற்சவமும், அன்றைய தினமே மாலை 5 மணிக்கு தீர்த்தோற்சவமும், தொடர்ந்து கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

ஆலய வளாகத்தில் வீடியோ திரைப்படக் காட்சிகள் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், உற்சவம் தினமும் இரவு 12 மணியுடன் நிறைவடையும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (113)

# அங்கத்தவர் தொடர்புக்கேற்ப இலாபம் பகிரப்படுகிறது!

## பொது முகாமையாளர் தெரிவிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 2002/2003 நிதியாண்டில் ஈட்டிய இலாபத்தினை அங்கத்தவர் தொடர்புக்கு ஏற்ப பங்கிட்டு வழங்கிவருகிறது.

ஐந்து லட்சம் ரூபா இலாபப் பங்கீடாக வழங்கப்படுவதாகவும், கடந்த வருடங்களுக்குப் பின்னர் முதன்முறையாக ஒரு அலகிற்கு 50 சதப்படி இலாபம் வழங்கப்படுவதாகவும் சங்கத்தின் பொது முகாமையாளர் வ.திருஞானசம்பந்தர் தெரிவித்தார்.

இந்த இலாபப் பகிர்தல்மூலம் மேலும் துறைசார்ந்த தொழிலாளர்களின் வருமானம் அதிகரிக்கப்படுவதுடன், இனிவரும் காலங்களில் சங்கத்தின் இலாபகர தொழிற்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வரணி வடக்கில்

# புதிய காவலரண் அமைப்பதால் பாடசாலை இயங்கமுடியாத நிலை

தென்மராட்சிப் பகுதியில் உள்ள வரணி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை மீள இயக்குவதில் பின்னடைவுகள் தோன்றியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தப் பாடசாலை வளவிலிருந்து அண்மையில் படையினர் வெளியேறியபோதிலும், தற்போது வளவில் மீண்டும் புதிய காவலரண் அமைக்கும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாடசாலையை மீள இயக்குவதற்கு பாடசாலை சமூகம் நடவடிக்கை மேற்கொண்டபோதும், படையினரின் இந்த நடவடிக்கை காரணமாக பாடசாலையை மீள இயக்குவதில் சிரமங்கள் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (122)



நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற தையல் மனையியற் கண்காட்சியின் போது நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர், தையற் போதனாசிரியை மற்றும் மாணவிகளையும், கண்காட்சிப் பொருட்களையும் காணலாம். (113)



யா/ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற பாரதி இல்லத்தின் தலைவர் - பிரதம விருந்தினர், பளை உதவி அரச அதிபர் சு.புத்திரசிகாமணியிடம் இருந்து கேடயத்தைப் பெற்றுக்கொள்வதைக் காணலாம். (122)


விடுதலை உணர்வுகளை சுமந்து வாழும் எமது கிளிநொச்சி, பளை, வடமராட்சி கிழக்கு பகுதி உறவுகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்!



தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தின் அரசியல் பலத்தினை மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டிய எமது நேசத்துக்குரியவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகவும் எனது சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த மாபெரும் வெற்றிக்கு தோள்கொடுத்த குறிப்பாக கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி சமூகம், கிளிநொச்சி மாவட்ட அழகியல் கலாமன்ற சமூகம், கிளிநொச்சி மாவட்ட கல்விச் சமூகம், பொது அமைப்புகள், வர்த்தக சங்கங்கள் குறிப்பாக விசுவமடு வர்த்தகர் சங்கம் மற்றும் கிராமிய அமைப்புக்கள் இளைஞர், யுவதிகள் அனைவருக்கும் அத்தோடு கிளிநொச்சி, பளை, வடமராட்சி கிழக்கு பிரதேச வாக்காளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது மக்களின் தேச விடுதலைக்காக இறுதிவரை உழைப்பேன் என உறுதியளிக்கிறேன்.

- செல்வராஜா கஜேந்திரன்-

(708)


## ஆசிரியர்களுக்கான விசேட வகுப்பு

நீர்வாழ் உயிர்வள தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான விடுமுறைக்கால விசேட வகுப்புக்கள் எதிர்வரும் வியாழக்கிழமை முதல் இடம்பெறவுள்ளது.

ஆசிரிய சேவையில் உள்ள அனைத்து ஆசிரியர்களையும் தமக்கு வழங்கப்பட்ட ஒழுங்கு அடிப்படையில் தவறாது கலந்துகொள்ளுமாறு தமிழீழ கல்விக் கழகத்தினர் கேட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் - யாழ். வலயக் கல்விப் பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பளை வைத்தியசாலைக்கு நிதியுதவி

போரினால் சேதமடைந்த பளை அரசினர் வைத்தியசாலையைத் திருத்தியமைப்பதற்கு 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிதியில் வெளிநோயாளர் பகுதி, நிர்வாக கட்டடப் பகுதி என்பவற்றுக்கு 55 லட்சம் நிதியும் - பிரசவ விடுதி, உதவி வைத்திய அதிகாரி விடுதி என்பவற்றைப் புனரமைக்க 25 லட்சம் ரூபாவும் வழங்கப் படவுள்ளது. புனரமைப்பு வேலைகள் முடிவுறும் தறுவாயில் உள்ளதாகவும், மிக விரைவில் வைத்திய சேவைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (122)


## இலங்கை வங்கி அறிவித்தல்

வங்கி அலுவல்களுக்காக இலங்கை வங்கியின் சகல கிளைகளும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரை திறந்திருக்கும். அத்துடன் வங்கியின் புதுவருடக் கொடுக்கல் வாங்கல்கள் யாவும் 14.04.2004 புதன்கிழமை காலை 9 மணிமுதல் நடைபெறும் என்பதனையும் அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உதவிப் பொது முகாமையாளர்,
உதவிப் பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

(சி-2419)

## சிறுவிளம்பரம்

### தாதி தேவை

அரியாலையில் இயங்கும் வைத்திய நிலையமொன்றிற்கு பெண் தாதி தேவை. விபரங்களுக்கு Tel:- 077 - 6284687 (707)

நாகம்ஸ் சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
விஜய், சிம்ரன், விவேக் தலைவாசல்
விஜய் மற்றும் பலர் நடித்த
A.R. ரஹ்மானின் இசையில்
தினசரி காட்சிகள் : 11.00, 2.00, 7.00, 10.00 (பு.நே)
(சி-2397)

நிறஞ்சனாஸ் சங்கானை

அஜித், சிம்ரன் நடித்த
உன்னைக் கொடு என்னைத் தருவேன்
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
Maid in Man Hattan
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.

பிரபு, ரம்பா நடித்த
பந்தா பரமசிவம்
(ரீல்ஸ்)
காட்சி நேரம்:-
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2263)

# விடுதலைப்போராட்டத்தை அடுத்தநிலைக்கு எடுத்துச் செல்ல மக்கள் உழைக்க வேண்டும்

## ஜெனிவாவில் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் கரிகாலன்



ஜெனிவாவில் நடந்த பொங்கு தமிழ் நிகழ்வில் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் கரிகாலன் ஆற்றிய உரை இங்கு பிரசுரமாகின்றது.

எம்மை பயங்கரவாதிகளாக சித்தரிக்க அமைச்சர் ஒருவர் அம்மையாரின் கட்சியில் இருக்கின்றார். அவர் பிரதமராக வருவதற்குக்கூட முயன்றுகொண்டிருக்கின்றார். இந்தரீதியில் அமையப்போகின்ற அரசு தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு தருமா? என்ற கேள்வி உள்ளது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலிலே சிங்களப் பேரினவாதக் கட்சியாகிய ஹெலஉறுமய மூன்றாவது நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் இலங்கை அரசு - தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வை தரமுடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில்தான் நாங்கள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றோம். இந்த ஐ.நா.சபையின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றோம்.

ஈழத்தமிழனுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுவதற்கு இந்த சிங்கள அரசுக்கு சர்வதேசம் அழுத்தம் கொடுக்குமா? அல்லது எங்களைப் பிரிந்துபோக அனுமதிக்குமா என்ற கேள்விகளைக் கேட்க விரும்புகிறோம்.

ஜனநாயகரீதியாக தமிழினத்துக்குத் தீர்வைத்தர அனுமதிக்க மறுத்தால், தமிழீழமே தீர்வு என்ற தந்தை செலவாவின் கொள்கையை நிறைவேற்றுவதற்கு இந்த ஐ.நா.சபை அங்கீகாரம் வழங்கவேண்டும் என்பதை கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம்.

இன்றைய காலப்பகுதியிலே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு மீண்டும் ஒரு சோதனை ஏற்பட்டிருக்கின்றது. தேசியத் தலைவர் இந்த விடுதலைப் போராட்டத்தை வழிநடத்துவதற்குப்பட்ட துன்பங்கள், இன்னல்கள் அநேகம். எமது தலைவர் ஆயுத முனையிலே தான் சிங்கள அரசிடம் நாம் உரிமை கேட்கமுடியும் என்ற அசையாத நம்பிக்கையோடு, தமிழினத் துரோகியான அல்பிரட் துரையப்பாவைச் சுட்டுக் கொன்று ஆயுதப் போராட்டத்தின் அடிச்சுவடியையே ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பல புலனாய்வுப் பொலிஸார்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். தமிழினத்திலே ஊடுருவியிருந்த தமிழின விரோத துரோகிகளை அழித்ததன மூலம்தான் விடுதலைப் போராட்டத்தை வளர்ப்பதற்கான சூழல் உருவாகியது. ஆரம்பகாலத்திலே பல அமைப்புக்கள் தமிழர்களது விடுதலைக்காகப் போரிடப் புறப்பட்டார்கள். 20 இற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் தமிழனிற்கு விடுதலை பெற்றுத்தரவேண்டும் என்பதற்காக ஆயுதப் போராட்டத்தில் குதித்தன. ஆனால், எல்லா இயக்கங்களும் அழிந்தது, விடுதலைப் புலிகள் தமிழீழத் தேசியத் தலைவரின் பின்னால் அணிதிரண்டு ஒரு மாபெரும் இராணுவக் கட்டமைப்போடு இன்றுவரையும் போராடிக் கொண்டே உள்ளார்கள். எனவே, எமது தேசியத் தலைவர் சந்தித்த துரோகத்தனங்கள் பல. இவற்றையெல்லாம் வென்றுதான் இன்று நிமிர்ந்து நிற்கின்றார்.

இன்று மட்டக்களப்பிலே கருணாவால் மீண்டும் ஒரு துரோகத்தனம் விடுதலைப் போரட்டத்திற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கருணா தேசியத் தலைவருக்கு அடித்த அடி - உலகத் தமிழர் எல்லோர் மனதிலும் வலிக்கின்றது. இதை ஒவ்வொரு வீடும் இழவு வீடாகக் கருதிச் செயற்பட்டுள்ளார்கள். குறிப்பாகப் புலம்பெயர் தமிழ்மக்கள் ஒவ்வொருவரையும் இந்த வேதனை பாதித்துள்ளது. அந்தவேதனையின் கொதிப்பால் நீங்கள் உணர்வுகள் பொங்க இந்தப் பொங்குதமிழில் கலந்துகொள்ள வந்திருப்பது தேசியத் தலைவரது கரங்களைப் பலப்படுத்த என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

எந்தத் துரோகத்தனத்திற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பு பணிந்துவிடாது. மட்டக்களப்பு மாவட்டத்திலும் இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வு நடத்தப்பட்டது. மட்டக்களப்பு மக்கள் இதே போன்றுதான் தேசியத் தலைவரின் படத்தைக் கையிலே ஏந்திக் கொண்டு 'தமிழர்களே புலிகள்' என்ற கோசத்தையும் எழுப்பி, அந்தப் பொங்கு தமிழிலே கலந்துகொண்டார்கள்.

இந்த மக்கள் தேசியத் தலைவர்மீது கொண்டுள்ள பற்றினை எந்தக் காலத்திலும் அழித்துவிட முடியாது என்பதை நடைபெற்றுமுடிந்த தேர்தல்மூலம் காட்டியுள்ளார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மாபெரும் வெற்றியை ஈட்டித் தந்து, தாங்கள் தேசியத் தலைவரின் பின்னால், தமிழ்த் தேசியத்தின் பின்னால், விடுதலைப் புலிகளே தமிழர், தமிழர்களே புலிகள் என்பதையும், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களது ஏகப பிரதிநிதிகள் என்பதனையும் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

எனவே, இந்தத்துரோகத்தனம் என்பது சிறிய பிரச்சினையாக மாறிவிட்டது. இது விடுதலைப் புலிகளுக்கு உள்ளேயுள்ள ஒரு உள் முரண்பாடு. ஆயுதம் தரித்த விடுலைப்போராட்டத்திலே இத்தகைய உள்முரண்பாடுகள் தோன்றுவது சகஜம். உள்முரண்பாடுகள் எழும்போது தீர்க்கப்படுவதுதான் விடுதலைப்போராட்டத்தின் உறுதிமிக்க பலமாக இருக்க முடியும். எங்கள் தேசியத் தலைவர் மிகநுட்பமாக போராளிகளுக்கு எந்தப் பாதிப்பும் எற்படாதவாறு கருணாகுழுவினரை வெளியேற்றுவதற்கான திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறார்.

இன்னும் சிறிது காலத்திற்குள் இந்தப் பிரச்சினை நிச்சயம் தீர்க்கப்பட்டு, மீண்டும் மட்டக்களப்பு மாவட்டத்திலே எமது விடுதலைப் போராட்டத்தின் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறும் என்பதை நான் உங்களிற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

தலைவர் எங்களை முக்கியமாக, இங்கு அனுப்பிவைத்தது - புலம்பெயர் மக்களிடையே ஒரு மிகப்பெரும் ஆதங்கமான, வேதனையான் நிகழ்வாக இந்தப் பிரச்சினை என்பதால் அதற்கு விளக்கமளிக்கத்தான் அலசப்படுகிறது. ஒரு பேச்சுவார்த்தை நடாத்துகின்ற காலப்பகுதிக்குள் ஒரு துரோகத்தனம் நடந்து விட்டதே என்று, புலம்பெயர் வாழ் மக்கள் அனைவரும் குமுறிக்கொண்டு நிற்கின்றார்கள் என்ற செய்தி தேசியத் தலைவரைச் சென்றடைந்தது.

உங்களை வானொலி மூலமாகப் பேட்டி காண்கின்ற போது, உங்களது உணர்வுகள் எல்லோர் மனத்தையும் தொட்டு நின்றது. நீங்கள் கேட்ட கேள்விகளமூலம் எத்தகைய மன நிலையில் இருக்கின்றீர்கள் என்பதை நாம் அறிந்தோம்.

இந்தத் துரோகத்தனம் என்பது எனக்குப் பழக்கப்பட்ட ஒன்று. நாம் துரோகிகளைப் பலதடவை சந்தித்துள்ளோம், எதிர்த்துநின்றுள்ளோம்.

மணலாற்றுக் காட்டுப் பகுதியைச் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இந்தியத் துருப்புக்கள் சுற்றிவளைத்து தாக்கிய போதும், மனம் குழம்பாது உறுதியோடுநின்று எதிராகப் போராடி, இந்த நாட்டைவிட்டு விரட்டியடித்த பெருமை எங்கள் தேசியத் தலைவருக்கு உண்டு. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு இலட்சம் துருப்புக்களால் முறியடிக்கமுடியாத எங்கள் தேசியத் தலைவரை, எந்த விததத்திலும் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தி விடப்போவதில்லை. நீங்கள் உறுதியோடு இருங்கள், இறுதி வரை போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்யுங்கள்.

உங்களது பங்களிப்புத்தான் இந்த விடுதலைப் போராட்டத்தை இவ்வளவு தூரம் வளர்த்தெடுத்துத் தந்துள்ளது. இங்கு நீங்கள் கஷ்ரப்பட்டு உழைக்கின்றபோதும், விடுதலைப் போராட்டத்திற்கு ஆற்றுகின்ற பணியினை நாங்கள் பார்க்கின்றோம். புலம்பெயர் மக்களாகிய நீங்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் தமது வாழ்க்கையை நடத்தினாலும், இரவு பகல் பாராது உணவை ஒறுத்து, விடுதலைப் போராட்டத்திற்காக நீங்கள் வழங்குகின்ற ஆதரவுதான் - இந்த விடுதலைப் போரட்டத்தின் வளர்ச்சிக்கும், இராணுவப் பலத்திற்கும் அடிப்படையாக அமைந்தது என்பதைத் தேசியத்தலைவர் எமக்கு எடுத்துச்சொன்னார்.

அந்த அடிப்படையில்தான் உங்களது பணி இதில் பிரதானமானதாக இருக்கவேண்டும். கருணா உங்களிடம் வந்து என்னைப் போன்றுதான் பேசியிருப்பார். ஆனால், அவர் ஒரு குற்றவாளியாகப்பட்டபோது, தேசியத்தலைவரின் முன்னால் நின்று செயற்படமுடியாமல், தலைவரைச் சந்திக்க முடியாமற் போனதன் காரணமாக இன்று ஒரு துரோகத்தனத்திற்குத் தூண்டப்பட்டுவிட்டார். எங்களுடைய ஒவ்வொரு போராளிகளும் போராட்டத்தில் இணையும்போது ஒரு உறுதிமொழியில் கையொப்பம் இடுவான். அந்தக் கையொப்பத்தை வாங்க முடியாத ஒரு தளபதியாக கருணா போயிருந்ததால், அந்தக் குற்றத்திற்கு முகம் கொடுக்கமுடியாமல், தேசியத் தலைவரைச் சந்திக்கமுடியாமல் துரோகத்தனத்திற்கு துணைபோய் விட்டார். அவர் தனிமைப்படுத்தப்பட்டு எமது இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். கருணாவின் துரோகத்தை இன்றோடு மறந்துவிடுங்கள். எமது அமைப்பில் இருந்து தூக்கியெறியப்பட்ட இவருக்காக எமது விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் நிலையோ அல்லது அவருக்காக அழுது கண்ணீர் வடித்து, இந்த விடுதலைப் போராட்டம் தூர்ந்துபோகும் நிலையோ ஏற்படக்கூடாது. இந்தப் போராட்டத்திலே தாமதங்கள், சலிப்புத்தன்மைகள் வரும். இவற்றுக்கெல்லாம் நாம் சோர்ந்து போகக்கூடாது என்றுதான் எம் உறுதிமொழியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே, தமிழ் மக்களாகிய நாம் எத்தனையோ துரோகத்தனங்களை வெற்றிகண்ட நம் தேசியத் தலைவர் இதனையும் வென்றெடுப்பார் என்றெண்ணி, இந்த விடுதலைப் போராட்டத்தை அடுத்தநிலைக்கு எடுத்துச்செல்ல உழைக்கவேண்டும். தொடர்ந்து போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்வதன் மூலம், இன்று நீங்கள் ஒன்று சேர்ந்துள்ள உணர்வோடு எங்கள் தேசியத் தலைவரதுகரத்தை மேலும் பலப்படுத்த வேண்டும் எனக் கரிகாலன் தெரிவித்தார்.

# அரச ஊடகங்களுக்கு எதிராக ஹெல உறுமய சட்ட நடவடிக்கை!

ஜாதிக ஹெல உறுமய தொடர்பாகத் தேவையற்ற விதத்தில் பொய்யான செய்திகளைப் பரப்பி, மக்களைக் குழப்பமடைய வைத்ததற்காக அரச ஊடகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கத்தீர்மானித்துள்ளதாக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக்கட்சியின் தலைவர் வண. எல்லாவல மெத்தானந்த தேரோ தெரிவித்துள்ளதாவது-

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள அரசியற் குழப்பநிலை காரணமாகக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர் கட்சியிலிருந்து கடந்த மாதம் 31 ஆம் திகதி விலகியுள்ளதாக அரச ஊடகம் அறிவித்துள்ளது.

அரச ஊடகத்தின் இந்த அறிவிப்பில் எவ்வித உண்மையும் இல்லை. இது மக்களிடம் எம்மைப்பற்றிய தவறான எண்ணங்களை ஏற்படுத்துவதற்காகத் தெரிவிக்கப்பட்டதாகும்.

எனவே, அரச ஊடகத்தின் இந்த அறிவிப்புத் தொடர்பாக நாம் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

அத்துடன், தேர்தல் காலத்தில் தனியார் ஊடகங்கள் செய்த பணியைப் பாராட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எந்தக் கட்சியுடன் கூட்டு; இன்னமும் தீர்மானிக்கவில்லை!

## சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேர்வது தொடர்பாக இதுவரை இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லையென - மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக உன்னிப்பாக அவதானித்து வருகிறோம். அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்காக எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேரப்போவதில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் எம்முடன் பேச்சுக்களை நடத்தியுள்ளன.

ஆனாலும், மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பாரிய திட்டமொன்றினை அங்கீகரிக்கும் கட்சி எது என்பதை அவதானித்து, அதன் பின்னரே தீர்மானம் எடுக்கப்படும்.

இது தொடர்பாகக் கட்சியின் உயர் மட்டக்குழு கூடித் தீர்மானம் எடுக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குடிநீர் தட்டுப்பாட்டை நீக்க யாழ்.செயலகம் நடவடிக்கை

கடும்வெயில் காரணமாக யாழ். மாவட்டத்தில் தேன்றியுள்ள குடிநீர் தட்டுப்பாட்டைநீக்க, யாழ்.செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது. கடந்த மாதம் முதல் யாழ்.மாவட்டத்தில் அதிகளவு வெப்பநிலை தோன்றியிருப்பதால், மக்கள் குடிநீர் பெறக்கூடியதாக அமைந்துள்ள கிணறுகள் வற்றிப்போயுள்ளன.

இதனைவிட, யாழ்.மாவட்டத்தில் குழாய் கிணறுகள்மூலம் நீர்பெறுவதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. தரைக்கீழ் நீர்மட்டம் சற்று ஆழத்தில் சென்றிருப்பதாலேயே இந்த நிலைதோன்றியுள்ளது.

இதையடுத்து, இந்த நீர்த்தட்டுப்பாட்டை நீக்குவதற்கு யாழ்.செயகத்தால் குடிநீர் விநியோகத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காகச் சமூகநலன்புரி அமைச்சின் உதவியுடன் சமூகசேவைத் திணைக்களத்தினூடாக பௌசர்கள் மூலம் இந்த நீர்விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. நெடுந்தீவு, கைதடி, கோப்பாய், அச்சுவேலி, காரைநகர் ஊற்காவற்துறை, புங்குடுதீவு, நயினாதீவு உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் இந்த நீர் விநியோகம் இடம் பெறவுள்ளது. அடுத்த மாதம் இறுதி வரை இந்த நீர்விநியோக நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# சமாதானத்தை முன்னெடுக்கும் அரசுக்கு ஐரோப்பிய யூனியன் ஆதரவு வழங்கும்

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அரசாங்கத்துக்குத் தாம் பூரண ஒத்துழைப்பு வழங்க உள்ளதாக ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது. சமாதானப் பேச்சுக்கள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவேண்டியது அவசியம் எனச் சுட்டிக்காட்டியுள்ள ஐரோப்பிய யூனியன், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்லவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

இந்தமுறை இடம்பெற்ற பொதுத் தேர்தல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய யூனியன் - கடந்த பொதுத் தேர்தல்களைப் போல் இந்தமுறை வன்முறைகள் இடம்பெறாததையிட்டு மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்துள்ளது. மேலும் இந்தத் தேர்தலில் வாக்களிப்பு வீதம் அதிகரித்துள்ளமை மக்களின் ஜனநாயகத்தை மதிக்கும் பண்பினை வெளிப்படுத்துவதாகவும் ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது.

## சகலதுறை வீரர் கிறிஸ் கெயின்ஸ்

# டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப்போவதாக தெரிவிப்பு

எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி றென்ட் பிரிஜ்ஜில் நடக்க இருக்கும் இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டியின் பின்னர், டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக நியூசிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரர் கிறிஸ் கெயின்ஸ் அறிவித்துள்ளார்.

ஆனாலும் ஒருநாள் போட்டித்தொடரில் தான் தொடர்ந்து விளையாடவுள்ளதாகவும் 33 வயதான கெயின்ஸ் தெரிவித்துள்ளார்.



றென்ட் பிரிஜ்ஜில் நடக்கும் டெஸ்ட் போட்டியில் விளையாடி ஓய்வுபெறுவது தான் சிறந்ததெனவும், அதுதான் சரியான இடமெனவும் நான் கருதுகின்றேன். ஏனெனில், இந்த இடம் எனக்கு நன்கு பரிச்சயமானதுடன் பல நினைவுகளையும் மீட்டிப் பார்க்கும் இடமாகவும் உள்ளது.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்வதற்கு எனக்கு பேரார்வம் உள்ளது. அத்துடன் தொடர்ந்து டெஸ்ட் கிரிக்கெட்டில் நீண்ட காலம் விளையாட எனது உடல்நிலை அனுமதிக்கும் என நான் நினைக்கவில்லை. எனது உடல் நிலை நன்றாக இருக்குமானால் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் நீண்டகாலம் விளையாடுவேன்.

1989 ஆம் ஆண்டு முதல் விளையாடிவரும் கெயின்ஸ் இதுவரை 59 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அதேவேளை உடல் உபாதை காரணமாக 57 டெஸ்ட் போட்டிகளில் விளையாடாமலும் விலகியுள்ளார்.

59 போட்டிகளில் விளையாடியுள்ள கெயின்ஸ் 3050 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதில் 5 சதங்களும், 20 அரைச்சதங்களும் அடங்கும். அத்துடன் பந்துவீச்சில் 202 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார். இவ்வாறு இரண்டிலும் பிரகாசித்த கெயின்ஸ் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் சேர் கார்பீல்ட் சோபர்ஸ், இயன்போதம், இம்ரான்கான் கபில்தேவ் மற்றும் சேர் றிச்சர்ட் ஹாட்லீ ஆகியோருக்கு அடுத்தபடியாக ஆறாவது இடத்தில் உள்ளார்.

# அவுஸ்ரேலிய அணி சிம்பாப்வே செல்கிறது

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி மே 17 ஆம் திகதிமுதல் ஜூன் 12 ஆம் திகதி வரை சிம்பாவேயில் சுற்றுப்பயணம் செய்து, 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள்போட்டிகளில் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் மே 22 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையும், 2 அவது டெஸ்ட் மே 29 ஆம் திகதி முதல் ஜூன் 2 ஆம் திகதி வரையும் நடக்கின்றது. ஒருநாள் போட்டிகள் ஜூன் 6, 9, மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெறும்.

டெஸ்டில் அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றியவர் வோல்ஷ். மேற்கிந்திய தீவுகள் அணியைச் சேர்ந்த இவர் 519 விக்கெட்டுக்கள் எடுத்துள்ளார். இவரது சாதனையை முறியடிக்க சேன்வோன் (அவுஸ்ரேலியா ) முரளிதரன் (இலங்கை) இடையே கடும் போட்டி நிலவுகின்றது.

வோனுக்கு 3 விக்கெட்டுக்களும், முரளிதரனுக்கு 7 விக்கெட்டுக்களும் தேவை. இதில் முரளிதரன்தான் சாதனையைக் கைப்பற்ற வாய்ப்புள்ளது. ஏனென்றால் இலங்கை அணிதான் முதலில் டெஸ்ட்போட்டியில் விளையாடவிருக்கின்றது. அவுஸ்ரேலியாவிற்கு மே கடைசிவாரத்தில் தான் டெஸ்ட் உள்ளது.

விளையாட்டு

இலங்கை அணி மே 6 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதிவரையும், 14 ஆம் திகதிமுதல் 18 ஆம் திகதி வரையும் டெஸ்டில் சிம்பாவேயுடன் ஆடுகின்றது. இந்த இரண்டு டெஸ்டில் முரளிதரன் 7 விக்கெட்டை கைப்பற்ற வாய்ப்புள்ளது. இதை அவர் தவறவிட்டால், வோனே சாதனையை உடைத்துவிடுவார். சிம்பாவே மண்ணில் வோல்ஷ் சாதனை முறியடிக்கப்படவுள்ளது.

## இங்கிலாந்து - மேற்கிந்திய தீவுகள்

# 4 ஆவது டெஸ்ட்டில் சந்திரபோல் நீக்கம்!



மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி தற்போது மிகவும் பரிதாபகரத்துக்குரிய நிலையில் இருக்கின்றது. தனது சொந்த மண்ணிலேயே அந்த அணி இங்கிலாந்திடம் தொடர்ந்து 3 டெஸ்டில் தோற்று தொடரை இழந்தது. அதனால் அந்த அணி நெருக்கடியில் உள்ளது.

மேற்கிந்திய தீவுகள் - இங்கிலாந்து அணிகள் இடையேயான 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் வருகிற 10 ஆம் திகதி அண்டிகுவாவில் தொடங்கிறது. இதற்கான மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மோசமாக ஆடியதால் சந்திரபோல் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இவர் 3 டெஸ்டில் மொத்தம் 101 ஓட்டங்களை எடுத்தார்.

நான்காவது டெஸ்ட்போட்டிக்கான மேற்கிந்திய தீவுகள் அணியின் விபரம் வருமாறு-

லாரா (அணித்தலைவர்), சர்வான், கெயில், டரன் கங்கா, போவெல், ஜோசப், சுமித் ரெயான் ஹின்ட்ஸ், ஜேகப், டீனோ பெஸ்ட், பெட்ரோ, கொலின்ஸ், கொலிமோர், எட்வர்ட்ஸ்.

# இந்தியாவுடனான 2 ஆவது டெஸ்ட்; பாகிஸ்தான் வலுவான நிலையில்!

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் லாகூரில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட்போட்டியின் இரண்டாம் நாளான நேற்று பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 355 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது.



முன்னதாக முதலாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது ஒரு விக்கெட்டை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 355 ஓட் டங்களைப் பெற்றுள்ளது.

இந்த அணி சார்பாக ஆரம்பத்துடுப்பாட்ட



வீரர் இம்ரான் பர்கத் சிறப்பாக விளையாடி 204 பந்துகளில் 14 பவுண்டரிகள் அடங்கலாக 101 ஓட்டத்தினைப் பெற்றார். இது அவரது டெஸ்போட்டியின் இரண்டாவது சதமாகும்.

மற்றைய வீரர்களான யாசிர் ஹமீட் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன்பின் அணித்தலைவர் இன்ஸமாம் உல்ஹக் 242 பந்துகளில் 14 பவுண்டறிகள் அடங்கலாக 118 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் உள்ளார். இவருடன் யூசுப்யுகானா 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார்.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் இம்ரான் பர்கத் மற்றும் அணித்தலைவர் இன்ஸமாம் உல்ஹக் இருவரது சதங்களுமே பாகிஸ்தான் அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

பந்துவீச்சில் பாலாஜி 2 விக்கெட்டுக்களையும் அகர்கர் ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளனர். நேற்றைய ஆட்டநேர முடிவின் போது பாகிஸ்தான் அணி இந்திய அணி முதல் இனிங்சில் பெற்ற 287 ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில் 68 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது.

# 3 நாடுகள் பங்குபற்றும் கிரிக்கெட்போட்டி கொலண்டில் ஓகஸ்ட் மாதம் நடைபெறும்!

இந்திய கிரிக்கெட் அணி தற்போது பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிவருகிறது. இந்தத் தொடர் முடிந்த பிறகு ஜூன்- ஜூலை மாதங்களில் நடைபெறும் ஆசியக் கோப்பைப் போட்டியில் பங்கேற்கிறது.

இந்திய அணி ஜூலை - ஓகஸ்ட் மாதங்களில் பங்களாதேஷில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டியில் விளையாடத் திட்டமிட்டிருந்தது. இந்தப் பயணம் தள்ளிவைக்கப்படுவதாக இந்தியக் கிரிக்கெட்சபை செயலாளர் எஸ்.கே.நாயர் தெரிவித்தார்.

கொலண்டில் நடைபெறும் 3 நாடுகள் போட்டியில் இந்திய அணி பங்கேற்கிறது. இதற்காகவே பங்களாதேஷ் பயணம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

கொலண்ட் தலைநகர் ஆம்ஸ்டர்மில் நடைபெறும் 3 நாடுகள் போட்டியில் உலக சம்பியனான அவுஸ்ரேலியா - பாகிஸ்தான் அணிகள் பங்கேற்கின்றன. இந்தப் போட்டி ஓகஸ்ட் 22 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை நடைபெறுகிறது.

இந்தப் போட்டி முடிந்த பிறகு இந்திய அணி செப்டம்பர் தொடக்கத்தில் இங்கிலாந்து செல்கிறது. அந்த அணியுடன் 3 ஒருநாள் போட்டியில் ஆடும். அதைத் தொடர்ந்து அங்கு நடைபெறும் ஐ.சி.சி சம்பியன் போட்டியில் பங்கேற்கிறது.

செப்டம்பர் கடைசியில் அவுஸ்ரேலிய அணி இந்தியா வருகிறது. அவுஸ்ரேலிய அணி 4 டெஸ்ட் மற்றும் 6 ஒரு நாள் போட்டியில் விளையாடுகிறது.

இந்தத் தொடர் முடிவடைந்த பின்னர் நவம்பர் மாதம் தென்னாபிரிக்க அணி இந்தியா வருகிறது. நவம்பர் 10 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை அந்த அணி சுற்றுப் பயணம் செய்து 7 ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது. டெஸ்ட் தொடர் அடுத்த ஆண்டு நடைபெறும்.

# கருத்துக்கணிப்பிற்கு தடைவிதிக்கவேண்டும் தேர்தல் ஆணையகத்திடம் கட்சிகள் கோரிக்கை

(டெல்கி)

இந்திய நாடாளுமன்றத்திற்கு ஐந்து கட்டமாக தேர்தல் நடத்தப்படவிருக்கிறது. முதற்கட்ட தேர்தல் வருகின்ற 20 ஆம் திகதி தொடங்குகின்றது.

அரசியல் கட்சிகளின் பிரசார விளம்பரங்கள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புவதையும் பத்திரிகைகளில் பிரசுரம் செய்வதையும் கண்காணிக்கவேண்டும் என்று, உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. தனிநபர் பற்றிய அவதூறான விளம்பரங்களை தடைசெய்யவேண்டும் என்றும் உத்தரவிட்டுருந்தது.

இது பற்றி அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்த அனைத்துக் கட்சிக்கூட்டத்துக்கு தலைமைத் தேர்தல் ஆணையகம் ஏற்பாடு செய்திருந்தது. இதன்படி அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டம் நேற்றுக் காலை டெல்கியில் தொடங்கியது. இந்தக் கூட்டத்தில் 6 தேசியக் கட்சிகளுக்கும் பல்வேறு மாநிலங்களிலிருந்து 47 மாநிலக் கட்சிகளுக்கும் கலந்து கொள்ள அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி.எஸ். கிருஸ்ணமூர்த்தி மற்றும் தேர்தல் ஆணையாளர்கள் தாண்டன், கோபால்சாமி ஆகியோரும் இதில் கலந்துகொண்டு அரசியல் கட்சி தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார்கள்.

தேர்தல் பிரசாரத்தின்போது, தனிநபர் பற்றி அவதூறாக பேசுவதை கைவிடுவது போன்ற பொதுக்கருத்து எட்டுவது குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தேர்தல் வெற்றிதோல்வி குறித்து கருத்துக்கணிப்பு வாக்குப் பதிவுக்கு பிந்திய கருத்துக் கணிப்பை தடைசெய்வது பற்றியும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்துகொண்ட எல்லாக் கட்சிகளும், முந்திய கருத்துக் கணிப்பிற்கும், பிந்திய கணிப்புக்களுக்கும் தடைவிதிக்கவேண்டும் என்று, தேர்தல் ஆணையகத்தை வற்புறுத்தின.

இறுதிக் கட்ட வாக்குப்பதிவு மே 10 ஆம் திகதி முடிவடைந்த பிறகுதான் கருத்துக் கணிப்பை வெளியிடவேண்டும் என்று அனைத்து கட்சிகளும் ஒரு மனதாக தேர்தல் ஆணையகத்துக்கு வேண்டுகோள் விடுத்தன. தனிநபர் விமர்சனங்களைத் தடுக்க தேர்தல் ஆணையகம் நெறிமுறைகளை வகுக்கவேண்டும் என்றும் அனைத்துக்கட்சிகளும் கோரிக்கை விடுத்தன.

# ஏ.கே.47 ரக துப்பாக்கிகளை கொள்வனவில் முறைகேடு!

(டெல்கி)

ஏ.கே.47 ரக துப்பாக்கிகள் வாங்கியதில் முறைகேடு நடந்ததாக மத்திய அரசின் மீது காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது. காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் கபில் சிபல் டெல்கியில் இது குறித்து நிருபர்களிடம் கூறியதாவது -

ஏ.கே.47 ரக துப்பாக்கிகளை வாங்குவதற்கு மத்திய உள்துறை அமைச்சகம் 2003 ஆம் ஆண்டு கேள்விப்பத்திரம் வெளியிட்டது. இதற்கு ரஷ்யாவிலுள்ள இஸ்மாஸ் என்ற ஆயுதக் கம்பனி குறைந்த விலையில் கேள்விப்பத்திரத்தை சமர்ப்பித்தது. இந்த கம்பனி தயாரிக்கும் ஏ.கே.47 ரக துப்பாக்கிகள் தரமானவை.

இது தொடர்பாக ரஷ்ய கம்பனி சார்பில், உஸ்பெக் குடியரசுத் தலைவர் இந்தியத் துணைப்பிரதமர் மற்றும் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடர்ந்து 3 கடிதங்களை எழுதினார்.

தங்கள் நாட்டு ஏ.கே.47 துப்பாக்கி பாதுகாப்பானவை என்று, அதில் அவர் குறிப்பிட்டிருந்தார். இதனை துணைப்பிரதமர் அத்வானியும் மத்திய உள்துறை அமைச்சரும்கண்டு கொள்ளவில்லை. ஆனால், கேள்விப்பத்திரம் கோரி ஒரு ஆண்டு கழிந்தபிறகு, ரஷ்ய கம்பனியின் கேள்விப்பத்திரத்தைப் புறக்கணித்துவிட்டு, பல்கேரியா கம்பனியான கில்டெஸ்ட் சேர் ஹோல்டிங் தயாரித்த ஏ.கே.47 ரகத் துப்பாக்கிகளை மத்திய உள்துறை அமைச்சகம் வாங்கியுள்ளது.இது தரம் குறைந்த துப்பாக்கிகள் ஆகும்.

ஏ.கே.47 ரகத் துப்பாக்கிகள் வாங்கியதில் முறைகேடு நடந்துள்ளது. இந்தப் பிரச்சினையில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மௌனமாக இருப்பது ஏன் என்பதை அறிய விரும்புகின்றேன். இவ்வாறு கபில் சிபல் கூறினார்.

07.04.2004

நமது ஈழநாடு - புதன்கிழமை



# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது! தரம் 5 புலமைப்பரிசில் வழிகாட்டி தரம் 5 மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டப்படி (கல்வி யாண்டு 2003) அண்மையில் வெளிவந்த மிகச்சிறந்த நூல் தரம் 1 முதல் தரம் 5 ஆசிரியர் கைந்நூலைத் தழுவி எழுதப்பட்டது. தமிழ் மொழி, கணிதம், ஆங்கிலம், இரண்டாம்மொழி, தேசியமொழி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் ஆக்கம், அழகியல், சுகாதாரம் - உடற்கல்வி சார்ந்த செயற்பாடுகள் போன்ற பாடங்களைத் தழுவி பாடவிளக்கமும் 25 பயிற்சியும் கொண்டு எழுதப்பட்டது. ஆசிரியர் த.அம்பிகைபாகன் **B.Ed** விலை ரூபா 200.00 தொகையாக எடுப்பவர்களுக்கு 20% கழிவுண்டு. 225 பக்கங்களையும் அழகிய அட்டைப் படத்தையும் கொண்டது. இன்றே நாடுங்கள்! படித்துப் பயனடையுங்கள்! புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையுங்கள்.

தொலைபேசி : 011-2506335 18,42 வது ஒழுங்கை வெள்ளவத்தை

### I

1. இவ்விளம்பரம் எந்நூலைப் பற்றியது.
...................................................................................
2. இந்நூல் எந்த தரத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு எழுதப்பட்டது.
...................................................................................
3. இந்நூலை எழுதிய ஆசிரியர் யார்?
...................................................................................
4. இதன் விலையென்ன?
...................................................................................
5. இந்நூல் எத்தனை பக்கங்களைக் கொண்டது?
...................................................................................
6. இந்நூலை எங்கு பெற்றுக்கொள்ளலாம்?
...................................................................................
7. 'விற்பனையாகிறது' என்ற சொல் உணர்த்தும் காலம் எது?
...................................................................................
8. இந்நூலில் எந்தப் பாடங்களைக்கொண்ட வினாக்கொத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன?
...................................................................................
9. 'கல்வியாண்டு' என்பதைப் பிரித்து எழுதுக
...................................................................................
10. இந்நூலை நன்கு படிப்பவர்கள் எந்தப் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெறலாம்?
...................................................................................

### பொருத்தமான எதிர்ச்சொல்லினை எழுதுக

11. புதிய ......................
12. அண்மை ......................

### பொருத்தமான ஒத்தசொல்லினை எழுதுக

13. ஆசிரியர் ..........................
14. நூல் ..............................
15. இவ்விளம்பரத்தில் காணப்படும் பெயர்ச்சொற்கள் இரண்டினை எழுதுக
(1) ........................... (2) ..........................

### II பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச்சொல்லை (ஆங்கிலத்தில் எழுதுக)

(1) கதிரை ................... (2) வெண்கட்டி ...................

(3) ஆசிரியர்.................... (4) சந்தை ......................

(5) கிணறு ....................

### III பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக

(1) நாலாயிரத்து மூன்று என்பதை இலக்கத்தில் எழுதுக
...................................................................................

(2) 8, 12, 7 ஆகிய இலக்கங்களைக்கொண்டு அமைக்கக்கூடிய மிகப்பெரிய எண் யாது?
...................................................................................

(3) ............... 5900 ............... முன்னுள்ள எண்ணையும் பின்னுள்ள எண்ணையும் எழுதுக

(4) 29 ஐக் குறிக்கும் உரோமன் எண் யாது?
...................................................................................

(5) பாடசாலை A யில் 8290 மாணவர்களும் பாடசாலை B யில் 4310 மாணவர்களும் உள்ளனர். A யில் B யைவிட எத்தனை மாணவர்கள் கூடுதலாகவுள்ளனர்.
...................................................................................

(6) தொழிற்சாலையொன்றில் திங்கட்கிழமை 2170 காலணிகள் உருவாக்கப்பட்டன. எல்லா நாட்களிலும் சமமான காலணிகள் உருவாக்கப்பட்டால் முதல் 5 நாட்களில் உருவாக்கப்பட்ட காலணிகள் எத்தனை?
...................................................................................

(7) பாத்திரமொன்றில் 3 l 200 ml குளிர்பானம் உள்ளது. இதனை 4 பிள்ளைகளுக்குச் சமமாகப் பங்கிட்டால் ஒரு பிள்ளைக்குக் கிடைக்கும் குளிர்பானத்தின் அளவு யாது?
...................................................................................

(8) மயூரனிடம் 6 m 80 cm நீளமான நாடாவுள்ளது. அவன் 11 மாணவருக்கு 50 cm வீதம் வெட்டிக்கொடுத்தால் மயூரனிடம் மீதயாக உள்ள நாடாவின் நீளம் எத்தனை செ.மீற்றர்?
...................................................................................

(9)




செவ்வகத்தின் சுற்றளவு யாது?
...................................

(10)



இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதியின் பின்னமென்ன?

### V பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

அன்பை வளர்க்க வேண்டும் - கிளியே
அறிவைப் பெருக்க வேண்டும்
உன்போற் பிறரை எண்ணி - நல்ல
உதவி புரியவேண்டும்
அன்னை சொற் கேட்க வேண்டும்
ஆணைக் கிணங்க வேண்டும்
தன்னை வணங்க வேண்டும் - பிறர்தம்மை
மதிக்கவேண்டும்

(1) நாம் எதை வளர்க்க வேண்டும்
...................................................................................

(2) யாருடைய சொல்லைக் கேட்கவேண்டும்

பட்டிருக்கும்.

(v) சிலர் உரிமையில் புதிய நிறுவனங்கள் உள்வருவதற்கு தடையேதுமில்லை

**13. பின்வரும் கூற்றுக்களில் எது மொத்த உள்நாட்டு உற்பத்தியினை சிறப்பாக வரைவிலக்கணப்படுத்துகின்றது.**

(i) நாட்டு மக்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பெறுமதி.

(ii) உள்நாட்டு, வெளிநாட்டு காரணிகளைக் கொண்டு நாட்டு மக்களால் உற்பத்தி செய்யப்பட்டவற்றின் மொத்தரீதியான பெறுமதி.

(iii) குறித்த அரசியல் பிரதேசமொன்றில் உற்பத்தி செய்யப்பட்டவற்றின் மொத்தரீதியான கூட்டப்பட்ட பெறுமதி.

(iv) நாட்டிற்கு சொந்தமான காரணிகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டவற்றின் மொத்தரீதியான கூட்டிய பெறுமதி.

(v) பெறுமானத்தேய்வு நீங்கலாகவுள்ள வெளியீட்டுப் பெறுமதி

**14. தரப்பட்டுள்ளவை ஒரு பொருளாதாரம் தொடர்பானவையாகும்.**

முதலீடு = 300 ஏற்றுமதிகள் = 250 இறக்குமதிகள் = 300
சேமிப்பு = 150 அரசாங்கச் செலவு = 200 செலவிடத்தக்க வருமானம் = 1400

இப்பொருளாதாரத்தில் காணப்படும் நுகர்வு, வரி என்பன முறையே எவ்வளவாகும்?

| | |
|---|---|
| (i) 1050, 400 | (ii) 1250, 300 |
| (iii) 1050, 150 | (iv) 1350, 400 |
| (v) 1350, 150 | |

**15. மொத்த தேசிய செலவுப் பெறுமானம் உமக்குத் தரப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு செலவுப் பெறுமானத்தை நீர் கணிக்கவேண்டியிருக்கின்றது. எச்சீராக்கத்தை நீர் செய்து கொள்வீர்?**

(i) வர்த்தகமீதியைக் கூட்டுதல்.
(ii) வெளிநாட்டுத்தேறிய முதலீட்டீடை கழித்தல்.
(iii) பொருட்கள் சேவைகளின் தேறிய இறக்குமதியைக் கூட்டுதல்.
(iv) பொருட்கள் சேவைகளின் தேறிய ஏற்றுமதியை கூட்டுதல்.
(v) வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறியகாரணி வருமானத்தை கூட்டுதல்.

16. எளிய பொருளாதாரம் ஒன்றில் சமநிலை வருமான மட்டமானது (Y) 2000 மில்லியன் எனவும் வருமானப்பெருக்கி 5 எனவும் தன்னிச்சையான நுகர்வு 100 மில்லியன் எனவும் கருதுக. இப்பொருளாதாரத்தின் முதலீடு மட்டம் எவ்வளவாகக் காணப்படும.

..........................................................................
..........................................................................
..........................................................................

## DMI பரீட்சைப் பிரிவு

## அளவையியலும் விஞ்ஞானமுறையும்

(1) அ. பின்வரும் எடுப்பு முரண்பாட்டு அனுமானங்கள் சரியானதா? தவறானதா?

1. சில மீன்கள் நீந்துவன எனின் சில மீன்கள் நீந்துவன அல்ல என்பது பிழை.
2. எந்த மீன்களும் நீந்துவன என்பது பிழை எனின் சில மீன்கள் நீந்துவன அல்ல என்பதை உறுதி செய்ய முடியாது.
3. எல்லா மீன்களும் நீந்துவன எனின் ஒவ்வொரு மீன்களும் நீந்துவன அல்ல என்பது சரியானது.
4. ஒரு மீனை தவிர மற்றெல்லாம் நீந்துவன எனின் எல்லா மீன்களும் நீந்துவன என்பது பொய்.

ஆ. பின்வரும் எடுப்பு முரண்பாட்டுத் தொடர்பை விளக்குக

1. வழிப்பேற்றுத் தொடர்பு
2. எதிர்மறை தொடர்பு

இ. எடுப்பு முரண்பாட்டு அனுமானத்தின் இருத்தல் போலி என்றால் என்ன?

ஈ. பாரம்பரிய எடுப்பு முரண்பாட்டு அனுமானத்தில் எல்லா அனுமானமும் வலிது ஆனால் தற்கால முரண்பாடுகளில் எதிர்மறை பூரணமானது என்றால் என்ன என்பதை விளக்குக?

(2) அ. I எடுப்புக்கு ஏன் மறுமாற்ற எதிர்வைப்பு செய்ய முடியாது என்பதை எதிர்மாற்ற விதிகள் மூலம் விளக்குக?

ஆ. I எடுப்புக்கு எதிர்மாறாக ஏன் A எடுப்பை பெற முடியாதுள்ளது என்பதை விளக்குக?

இ. பின்வரும் வழிப்பெறுகை அனுமானங்கள் வலிதானதா வலிதற்றதா என்பதை துணிக?

1. சில பாம்புகள் நீளமானவை
எனின் நீளமற்றவை பாம்புகள்

2. எந்த வைத்தியரும் திறமைசாலிகள்
எனவே திறமைசாலிகள் வைத்தியர்கள்

3. எல்லா பூக்களும் அழகானவை ஆகும்.
எனின் சில மலர்கள் அல்லாதன அழகற்றவை அல்ல

ஈ. எடுப்பு வெளிப்பேற்றுக்கு அது பற்றிய தற்கால விளக்கத்துக்கு இடையிலான வேறுபாடுகள் எவை?

உ. A,E எடுப்புக்கு எதிர்வைப்புக்கு உதாரணம் தருக?

(3) அ. பேரெடு கூற்று குறை சிற்றெடுகூற்று மறை எனும்போது வலிதான முடிவு பொருத்தமற்றது என்பதை விளக்குக?

ஆ. பின்வரும் நியாயத் தொடைகளை பிரதான விதிகள் கொண்டு வலிதினை தீர்மானிக்குக வலிதற்றதாயின் மீறப்பட்ட விதி அல்லது விதிகளை கூறுக?

1. இராணுவம் மக்களைப் போல் அமைதியானவர் அல்ல
எனவே இராணுவம் மக்கள் அல்ல

2. பெண்களைத் தவிர வேறு எவரும் சிந்திப்பவர் அல்ல
சிந்திப்பவர் மட்டுமே ஆண்கள்

3. செத்தல் மிளகாய் உறைப்பானது ஆகும்
ஏனெனில் பச்சைமிளகாய் இனிப்பானது
என்பதுடன் செத்தல் மிளகாய் பச்சைமிளகாய் என்பதால்

(4) அ. பின்வரும் எடுப்புக்களை சுருக்கத்திட்டத்தின் துணைகொண்டு குறியீடு செய்து அவை வலிதானதா வலிதற்றதா என்பதை வென்வரை படத்தின் மூலம் துணிக?

1. மாரப்பனவும் கதிர்காமரும் அமைச்சர்கள் அல்ல.
அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள்
எனவே கதிர்காமர் பாராளுமன்ற உறுப்பினர் அல்ல.

2. சில அறிவாளிகள் சிந்திப்பவர் என்பதுடன் சிரிப்பவர்
எல்லா அறிவாளிகளும் சிரிப்பவர்
எனவே சில சிந்திப்பவர் சிரிப்பவர்

3. எல்லா நாய்களும் நரிகளும் ஊளையிடுவன
சில நாய்கள் நரிகள் ஆகும்.
எனவே சில நரிகள் ஊளையிடுவன ஆகும்.

4. ஆசிரியர்கள் இருக்கிறார்கள்
பண்டா ஆசிரியர் அல்ல
எனவே பண்டா இருக்கிறார்

ஆ. எல்லா மயில்களும் குயில்கள் ஆகும்.
சில குயில்கள் ஆடுவன அல்ல என்னும்
எடுப்புக்களுக்கு வென் வரைபடத்தை வரைந்து பின்வரும் முடிவுகள் வலிதானதா? வலிதற்றதா என விளக்குக?

1. எந்த குயில்களும் மயில்கள் இல்லை
2. சில குயில்கள் இல்லை
3. எந்த மயில்களும் இல்லை
4. சில மயில்கள் குயில்கள் இல்லை

P. கமல்
இந்து மகளிர் கல்லூரி

இங்கே மடிக்கவும்

.................................................................

(3 யாருடைய ஆணைக்கு இணங்கவேண்டும்

.................................................................

பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான ஒத்தசொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக

(4) தந்தை ...............................

(5) அன்னை ...............................

பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான எதிர்ச்சொல்லைப் புள்ளிக்கோட்டில் எழுதுக

(6) அன்பு ...................... (7) பிறர் ......................

(8) நாம் எதனை அதிகரிக்க வேண்டும்?

.................................................................

(9) நாம் யாரை மதிக்க வேண்டும்

.................................................................

(10) இருமுது குரவர் எனப்படுவோர் யாவர்?

.................................................................

(11) ஞானம் என்பதற்கு ஒத்தசொல் பாட்டில் உள்ளது. அச்சொல்லை எழுதுக?

.................................................................

VI பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் கூற்றின் எதிரேயுள்ள அடைப் புக்குறியினுள் எழுதுக

1. தமிழ்மொழியில் 247 எழுத்துக்கள் உண்டு. ( )

2. பூமி தட்டை வடிவானது . ( )

3. அல்லும் பகலும் என்பது இரட்டைமொழியாகும். ( )

4. 50 என்பதை உரோம எண்ணில் L எழுதலாம். ( )

5. ஒவ்வொரு கூற்று வாக்கியத்தின் முடிவிலும் வினாவிசைக் குறி இடப்படும். ( )

6. இந்திய விடுதலைக்காக பாடுபடாத பெரியார் மகாத்மா காந்தி. ( )

7. உணவு உடை உறைவிடம் என்பன மனிதனின் அடிப்படைத் தேவைகளன்று. ( )

8. நாம் தொலைக்காட்சியில் நல்ல மாணவர் நிகழ்ச்சிகளைப் பார்க்கவேண்டும். ( )

9. காந்தம் எப்போதும் வடக்கு நோக்கியே இருக்கும். ( )

10. மனிதனின் சாதாரண உடல் வெப்பநிலை 37°C ஆகும். ( )

VII பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

1. இலங்கையின் தேசியப்பறவை
   1. மயில்
   2. கோழி
   3. புறா
   4. காட்டுக்கோழி

2. தேசிய கீதத்தை இயற்றியவர்
   1. மகாத்மா காந்தி
   2. ஆனந்த சமரக்கோன்
   3. பாரதியார்
   4. கண்ணதாசன்

3. ரூபன் ரூபா 2.00 முத்திரைகளையும் ரூபா 3.00 முத்திரைகளையும் சம எண்ணிக்கையில் வாங்கினான். இம்முத்திரைகளின் பெறுமதி ரூபா 200.00 எனின் அவன் வாங்கிய முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 40  2. 20  3. 80  4. 100

4. இவ்வெண்தொடரில் அடுத்து வரவேண்டிய எண்களின் எண்ணிக்கை



12
13
14
15

5. சாதாரண மின்கலமொன்றின் மின்னியக்க விசை

1. 1.0V  2. 1.5V
3. 2.0V  4. 2.5V

6. கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று

1. உதைபந்தாட்டம்  2. கைப்பந்தாட்டம்
3. துடுப்பந்தாட்டம்  4. கிளித்தட்டு

7. அடிப்படை நிறமல்லாதது

1. சிவப்பு
2. பச்சை
3. நீலம்
4. மஞ்சள்

8. காலத்தைக் காட்டும் சொல்

1. பெயர்ச்சொல்
2. வினைச்சொல்
3. இடைச்சொல்
4. உரிச்சொல்

9. அணிநடையின்போது இலகுவாய் நில் என்ற கட்டளை இட்டதும்

1. காலை அகல வைத்து கையை முன்னே கட்டவேண்டும்.
2. காலை அருகே வைத்து கையை பின்னே கட்டவேண்டும்.
3. காலை அகல வைத்து கையை அருகே விடவேண்டும்.
4. காலை அருகே வைத்து கையை அருகே விடவேண்டும்.

VIII. நான் பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்துகொண்டிருந்தேன். என்னுடன் நண்பன் மயூரன் வந்தான். வீதியில் தங்கச்சங்கிலி ஒன்று காணப்பட்டது. அதை நான் எடுத்துக்கொண்டு வீடுவந்து அம்மாவிடம் காட்டினேன். ...................................... கதையைப் பூரணப் படுத்துக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்கள் இடம்பெறுவ துடன் பொருத்தமான எழுவாய், பயனிலையும் காணப்படல் வேண்டும்.

1. ..........................................................
..........................................................
2. ..........................................................
..........................................................
3. ..........................................................
..........................................................
4. ..........................................................
..........................................................
5. ..........................................................
..........................................................
6. ..........................................................
..........................................................

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

# க.பொ.த (உ/த) பொருளியல் 2004 ஏப்ரல்

**1. பெருளியல் "மையப் பொருளாதாரப்பிரச்சினை"** (The central Economic Problem) **என்பதன் கருத்து யாது?**
(i) நுகர்வோர்களிடம் தேவைக்கேற்ற பணம் இல்லாமை.
(ii) எல்லாப் பொருளாதாரங்களிலும் குறிக்கப்பட்ட அளவில் வேலையின்மை இருக்கின்றமை.
(iii) மூலவளங்கள் உத்தமமான ஒதுக்கீட்டைக் கொண்டிருக்காமை.
(iv) மூலவளங்களின் இருப்பு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் வெளியீடு மட்டுப்படுத்தப்படுகின்றமை.
(v) மூலவளங்கள் பல்வேறு தேவைகளுக்கு மாற்றிப் பயன்படுத்தக் கூடியதாயிருக்கின்றமை.

**2. சமூகத்தின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையான "எவ்வாறு செய்யப்படுதல்" என்பதனால் கருதப்படுவது யாது?**
(i) பல்வேறுபட்ட மாற்றுத் தேவைகளுக்கிடையில் கிடைப்பருமையான சாதனங்களை பகிர்தல்.
(ii) பொருளாதாரத்தின் மொத்த வெளியீடு எவ்வழியில் வீட்டுத்துறையினரிடையே பங்கீடு செய்யப்படுகின்றது என்பதனையாகும்.
(iii) உற்பத்தி தொழிநுட்ப நுண்முறைத் தெரிவு என்பதனையாகும்.
(iv) உற்பத்தியானது நுகர்வுக்குரியதா அல்லது முதலீட்டுக்குரியதா என்பதனையாகும்.

**3. "வளங்களின் வினைதிறன" என்பதனை மிகச்சரியாக விபரிக்கும் கூற்று எது?**
(i) யாதாயினும் பொருளாதார நடவடிக்கைமூலம் பெறப்படும் மொத்த வெளியீட்டளவாகும்.
(ii) ஓரலகு வெளியீட்டினை பெறுவதற்கு தேவையான வளங்களின் அளவாகும்.
(iii) உற்பத்தி நடவடிக்கையில் ஓரலகு உள்ளீட்டை மேலதிகமாக பயன்படுத்தும்போது கிடைக்கத்தக்க வெளியீட்டளவாகும்.
(iv) ஓரலகு உள்ளீட்டைக் கொண்டு பெறத்தக்க மொத்த வெளியீட்டளவாகும்.
(v) வெளியீடு அதிகரிக்கும் வேகத்தைவிட உள்ளீடு அதிகரிக்கும் வேகம் அதிகமாயிருத்தலாகும்.

**4. பொருளாதார பொதுப்பணி மூலதனத்திற்குள் உள்ளடங்காதவற்றைக் கொண்ட விடை யாது?**
(i) வைத்தியசாலைகள். வீதிகள்
(ii) பாடசாலைக் கட்டடங்கள், நீர்ப்பாசன முறைகள்
(iii) தொலைத்தொடர்பு கட்டமைப்பு, மின்சாரம் வழங்கல்
(iv) கழிவகற்றும் கால்வாய்கள், குளங்கள்
(v) தொழிற்பயிற்சி நிறுவன கட்டடங்கள், பாலங்கள்

**5. தரப்பட்டுள்ள உற்பத்தி சாத்திய எல்லையில்** A **யிலிருந்து** B **நோக்கிய அசைவு எதனைப் பிரதிபலிக்கின்றது.**




(i) இரு பண்ட உற்பத்தியிலும் புதிய தொழில்நுட்பமுறை கையாளப் படுவதனால் உற்பத்தி அதிகரிக்கின்றமை.
(ii) Y பொருள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக X பொருள் உற்பத்தியளவு குறைந்து செல்லுகின்றமை.
(iii) வேலையின்மை வீழ்ச்சியடைந்து பொருளாதாரம் வளங்களை முழுமையாகவும் திறமையாகவும் கையாளுகின்றமை.
(iv) இரு பொருள் உற்பத்தியிலும் பயன்படுத்தப்படும் வளங்களின் உற்பத்தித்திறன் அதிகரிக்கின்றமை.
(v) அமையச்செலவு இன்றி X,Y ஆகிய இரு பொருள் உற்பத்திகளும் அதிகரிக்கப்படுதல்.

**6. இழிவுப்பண்டமொன்றின் மிகப் பிரதான இயல்பு யாது?**
(i) குறைந்த விலையில் குறைந்தளவு பொருளுக்கு விலை அதிகரிக்கும்போது அதிகளவு பொருளுக்கு கேள்வி எழுப்பப்படல்.
(ii) வருமான விளைவும் பிரதியீட்டு விளைவும் நேர்கணியமாகயிருத்தல்.
(iii) நுகர்வோன் வருமானம் குறையுமிடத்தில் பொருளைக் குறைத்து கொள்வனவு செய்தல்.
(iv) வருமானம் குறைந்தவர்களினால் பிரதானமாக நுகர்வு செய்யப் படும் பொருளாகயிருத்தல்.
(v) வருமான விளைவு எதிர்க்கணியமாகவும் பிரதியீட்டு விளைவுக்கும் மேலானதாகவும் இருத்தல்.

**7. எப்போது "குறைந்து செல்லும் விளைவு விதி" ஒரு உற்பத்தி செயற்பாட்டிற்கு பொருந்தும்**
(i) எல்லாவிதமான உற்பத்திக்காரணிகளையும் மாற்றக்கூடியதாக இருக்கும்போது
(ii) குறைந்தது ஒரு காரணியையாவது உற்பத்தியில் நிலையாக வைத்திருக்கும்போது
(iii) எல்லா உற்பத்திக் காரணிகளையும் நிலையாக வைத்திருக்கும் போது
(iv) மூலதனத்தின் உபயோகத்தை மட்டும் உற்பத்தியில் நிலையாக வைத்திருக்கும்போது
(v) தொழில்நுட்பத்தில் மாற்றம் ஏற்பட்டுச் செல்லும்போது

**8. உழைப்புக்காரணியின் சந்தைச் சமநிலையை பின்வரும் வரிப்படம் புலப்படுத்துகின்றது. இப்படத்தின்படி ஊழியத்தின் மாற்று வருமானம் எவ்வளவாகும்.**




(i) 20000 ரூபா (ii) 2500 ரூபா
(iii) 12500 ரூபா (iv) 5500 ரூபா

**9. குறிப்பிட்ட பிரதேசத்தில் மாதாந்தம் அரிசிக்கு ஏற்படும் மொத்தக் கேள்வி 10000** Kg **ஆகும். அரிசியின் கேள்வியின் விலை நெகிழ்ச்சிக் குணகம் - 0.75 ஆகும். அரிசியின் விலையை 20% த்தால் குறைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இவ்விலைக்குறைப்பின் விளைவாக அரிசிக்கு ஏற்படும் மிகைக் கேள்வி எவ்வளவு?**

(i) 1000 Kg (ii) 1250 Kg (iii) 12500 Kg
(iv) 1500Kg (iv) 11500 Kg

**10. நீங்கள் உடன்படாத கூற்றினை அடையாளமிடுக.**
(i) கேள்வி நெகிழ்ச்சி உயர்வாகவும் நிரம்பல் நெகிழ்ச்சி சிறிதாகவும் உள்ளபோது அரசு வரிவிதித்தால் நுகர்வோரைவிட உற்பத்தியாளர்களுக்கு வரித்தாக்கம் அதிகமாகயிருக்கும்.
(ii) பண்டமொன்றின் கேள்வியின் விலை நெகிழ்ச்சி பூச்சியமாகவுள்ள போது அரசு வரிவிதித்தாலும் அதன் சந்தைச் சமநிலை விலை மாறாதிருக்கும்.
(iii) பண்டத்தின் கேள்வி நெகிழ்ச்சி சிறிதாகவும் நிரம்பல் நெகிழ்ச்சி உயர்வாகவும் உள்ளபோது அரசு மானியம் வழங்கின் உற்பத்தியாளரே முழுமையாக நன்மையடைவர்.

**11. பண்டமொன்றின் விலை குறையும் பொழுது அப்பண்டத்திற்கான மொத்தச் செலவீடு குறைந்து செல்கின்றது. எந்த நிலைமைகளின் கீழ் இது நிகழக்கூடும்.**
(i) பண்டத்தின் கேள்வி நெகிழ்ச்சி உயர்வாக இருக்கும்போது
(ii) பண்டத்தின் கேள்விநெகிழ்ச்சி அலகுத்தன்மையுடையதாகவுள்ள போது
(iii) பண்டம் மிக நெருங்கிய பிரதியீடுகளைக் கொண்டிருக்கும்போது
(iv) பண்டத்திற்கான கேள்வி மிகவும் நெகிழ்ச்சியற்றதாகக் காணப் படும்போது.

**12. பின்வரும் கூற்றுக்களில் எதனை நீர் சரியென ஏற்பீர்?**
(i) நிறைபோட்டிச் சந்தையின் குறுக்கு கேள்விநெகிழ்ச்சி பூச்சியமாக காணப்படும்.
(ii) தனியுரிமைப் போட்டிச்சந்தையில் புதிய நிறுவனங்கள் உள்நுழைவதற்கு தடையுண்டு.
(iii) தனியுரிமை நிறுவனம் நீண்டகாலத்தில் சாதாரண இலாபத்தையே பெறமுடியும்.
(iv) தனியுரிமைப் போட்டிச் சந்தையில் பண்டங்கள் பேதப்படுத்தப்

நேற்றுமுன்தினம் ஜெனிவாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்விலிருந்து சில காட்சிகள்












# தமிழரசுக்கட்சி ஆதரவாளர் மீது ஈ.பி.டி.பியினர் தாக்குதல்!

## ஊர்காவற்துறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரவாளர் ஒருவர் ஈ.பி.டி.பி. கட்சியினரால் ஊர்காவற்துறையில் வீடு புகுந்து தாக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கோபாலசிங்கம் றஞ்சித்குமார் (வயது -25) என்ற ஊர்காவற்துறை - கொத்திக்குளம் என்னுமிடத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரே தாக்கப்பட்டவராவார்.

கொட்டன்கள், சைக்கிள் செயின், கத்திகள், வாள்கள் சகிதம் வீட்டினுள் நுழைந்த ஈ.பி.டி.பியினர் - இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கு வாக்களித்தமையையும், அந்தக் கட்சி வேட்பாளரான ஸ்ரீகாந்தாவிற்கு வாக்களித்தமையையும் கேட்டுக் கேட்டுத் தாக்கியுள்ளனர்.

தீவகப் பகுதி ஈ.பி.டி.பியினரின் மண் என்பதை மறந்து, தமிழரசுக் கட்சிக்குச் சேவையாற்றப் போவாயா? எனவும் கேட்டுத் தாக்கியுள்ளனர்.

பின்னர் அவரது சகோதரியான கோ.தர்சினியின் மடியில் கிரனேற்றை வைத்துவிட்டு, வெடிக்க வைக்கப் போவதாகவும் -

அந்தவேளை, இவர்களது அடாவடித்தனத்தை எதிர்த்த அயல் வீட்டுக்காரரான கணேஸ் மற்றும் றஞ்சித்தின் தாயாரான கோ.அந்தோனிப்பிள்ளை போன்றோரும் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இத்தாக்குதலை நடத்தியவர்கள் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த ஊர்காவற்துறைத் துணைப்பொறுப்பாளர் காந்தன் மற்றும் றஞ்சித் அடங்கிய மூவர் கொண்ட குழுவினர் என யாழ். மாவட்ட அரசியற்துறையினரிடம் முறையிடப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளானவர் தனக்கு உயிராபத்திருப்பதாகத் தெரிவித்ததை அடுத்து, இலங்கைத் தமிழரசுக்கட்சி வேட்பாளர் ஸ்ரீகாந்தா அவரை ஊர்காவற்துறையிலிருந்து அழைத்துவந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் - அவர் கால்கள் மிகவும் பாதிக்கப்பட்டு, நடக்கமுடியாத நிலையில் உள்ளார். (ப)

## யாழ்.நீதிமன்றத்தால்

# விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் தாயகம் திரும்புவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்தபோது உள்ளூர் மீனவர்களாலும், கடற்படையினராலும் பிடிக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் யாழ்.மேல்நீதி மன்றத்தால் விடுவிக்கப்பட்டிருந்த போதும், அவர்கள் தாயகம் திரும்புவது தாமதமாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக யாழ்.சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இவர்கள்மீது, சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல்நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு யாழ்.மேல் நீதி மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தண்டனைகளும் விதிக்கப்பட்டிருந்தன.

எனினும், இவர்கள் தண்டனைக் காலத்தை முன்னதாகவே யாழ். சிறைச்சாலையில் அனுபவித்திருந்ததையடுத்து, அவர்களை விடுவிக்க நீதிவான் அனுமதி தந்திருந்தார்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் யாழ். சிறைச்சாலையிலிருந்து பொறுப்பேற்று, இலங்கை-இந்தியக் கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படையிடம் கையளிக்கவும் நீதிவான் பணித்திருந்தார்.

எனினும், இதுவரை இலங்கைக் கடற்படை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமையால் அவர்கள் அனைவரும் தொடர்ந்தும் யாழ். சிறைச்சாலையிலேயே தங்கியிருந்தனர்.

இதேவேளை, இந்த மீனவர்களது படகுகளும், மீன்பிடி உபகரணங்களும் மேல்நீதிமன்ற நீதிவானின் பணிப்பின் பிரகாரம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(202)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
1
முதலாவது அகவையில்



பெயர் : மோ.கபில்ராஜ்
முகவரி : 4 ஆம் வட்டாரம், நெடுந்தீவு,

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :-----------------------------------
முகவரி :-----------------------------------
பிறந்த ஆண்டு:-----------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
-----------------------------------
பெற்றோர் ஒப்பம்

# எந்தக் கட்சிக்கு ஆதரவு என்பது; இன்னும் தீர்மானிக்கப்படவில்லை!

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)



இலங்கைத் தமிழசுக் கட்சி இதுவரையில் எந்தக் கட்சிக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்து, தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லையென - கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆட்சியமைப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியன் ஒத்துழைப்பை எதிர்பார்க்கும் கட்சி - தமிழ்மக்களது அபிலாஷைகளுக்கு எவ்வாறான பதிலை அளிக்கப்போகிறது என்பதைப் பொறுத்தே எமது தீர்மானம் அமையும்.

எவ்வாறாயினும், எந்தத் தீர்மானத்தை எடுக்க முன்பும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்துடன் கலந்துரையாடிய பின்னரே புதிய தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### பொங்கல் விழா

தெல்லிப்பளை மேற்கு தோதிர அம்மன் ஆலய பங்குனி மாத வருடாந்தப் பொங்கல் விழா - எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (72)

### விஞ்ஞான சங்க வினாவிடைப் போட்டி

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கம் நடத்தும் கால் இறுதி, இறுதிநிலை வினா விடைப்போட்டி இன்றும், நாளையும் - காலை 9 மணிக்கு யாழ். பலகலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கடந்தமாதம் நடைபெற்ற எழுத்துப் பரீட்சையில் முதல் எட்டு இடங்களையும் பெற்ற ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ்.இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி எனபன பங்குபற்றவுள்ளன.

### மீனவர்களின் வலைகள் நாசம்

வடமராட்சி கடற்பரப்பில் உள்ளூர் மீனவர்களது வலைகளை - இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் கொள்ளையிடுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. நேற்று முன்தினமும் சுமார் 2 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இவ்வாறு கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202)

### இலங்கை வங்கி அறிவித்தல்

வங்கி நடவடிக்கைகளுக்காக இலங்கை வங்கியின் சகல கிளைகளும் - ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணிவரை திறந்திருக்கும்.

அத்துடன், வங்கியின் புதுவருடக் கொடுக்கல் வாங்கல்கள் யாவும் 14 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிமுதல் நடைபெறும் என்பதையும் வாடிக்கையாளர்களுக்கு அறிவித்துள்ளனர்.

அரசியல்நோக்கு

கே.ரி.கணேசலிங்கம்

# தமிழர்கள் தனியரசாக பிரிந்து செல்வதற்கான ஆணையை மீண்டும் வழங்கியுள்ளனர்

**2004** ஆம் ஆண்டுத் தேர்தல் பற்றி இலங்கை மக்களுக்கு மட்டுமன்றி, முழு உலகத்திலும் இருக்கும் இலங்கையருக்கும், உலக மக்களுக்கும் வெவ்வேறான தனித்துவமான அளவீடுகள் காணப்படுவது தவிர்க்கமுடியாதது. ஆனால், இந்தத் தேர்தல் பற்றிய முடிவுகள் - இலங்கைத் தமிழர்களின் பார்வையில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துமென்பதே இன்றுள்ள பிரச்சினையாகும்.

தமிழர்களின் அரசியலில் இரண்டு பரிமாணங்கள் எப்போதும் ஆதிக்கம் செலுத்திவந்துள்ளன. ஒன்று தமிழர் வாழும் பிராந்தியமான வடக்கு - கிழக்குப் பற்றிய அரசியலாகும். இந்தப் பகுதிகளில் தமிழரின் செல்வாக்குடைய சக்திகளின் நாடாளுமன்றப் பிரவேசம்- தென்னிலங்கை அரசியல் சக்திகள்மீது செல்வாக்குச் செலுத்தும் அம்சமாக இருந்திருக்கின்றது.

இரண்டாவது தென்னிலங்கையில் ஆட்சியை அமைக்கும் சக்திகளின் போக்கை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்மக்களின் அரசியல் பரிசீலிக்கப்படுவதுண்டு. இவற்றோடு மூன்றாவது பரிமாணம் ஒன்றும் அண்மைக் காலத்திலிருந்து தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துள்ளது. எனவே, இந்தக் கட்டுரை இம்மூன்று சக்திகளின் தளங்களையும், ஏற்படவுள்ள மாற்றங்களையும் மையப்படுத்தி, இலங்கைத் தமிழர்களின் தேர்தலுக்குப் பிந்திய அரசியலை அளவீடு செய்ய முயலுகின்றது.

வடக்கு - கிழக்கில் எழுந்துள்ள அரசியல் சக்தியாகத் தமிழர் கூட்டமைப்பு என்ற (TNA) இலங்கை தமிழரசுக்கட்சி விளங்குகின்றது. ஏனைய கட்சிகளோடும், சுயேட்சைக் குழுக்களோடும் ஒப்பீடு செய்யும்போது, தமிழ் மக்களின் செல்வாக்கையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பையும் பெற்ற கட்சியாக இ.த.க.விளங்குகிறது.

ஆனால், கிழக்குப் பகுதியில் பூதாகாராமாகக் காட்டப்படும் மூன்றாம்தர அரசியல் சக்திகள் தமிழர்களின் இயல்புநிலையையும் தேசிய ஐக்கியத்தையும் திட்டமிட்டு கூறுபோட முயற்சித்துவருகிறன.

இது ஆரம்பத்தில் இருந்த நிலையைவிட தற்போது படிப்படியாகப் பலவீனப்பட்டு, தமிழ் மக்களாலேயேநிராகரிக்கப்படும் நிலையை அடைந்துள்ளது. இது ஒரு போலியான அதே நேரம் வெளிச்சக்திகளின் தூண்டுதலால் தனிப்பட்டரீதியில் ஏற்பட்ட பிரச்சினை என்பதை கிழக்கு மக்களும், வடக்கு மக்களைப் போல் நம்புகின்ற நிலமை ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வதேச நாடுகளும், போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவும், இலங்கையின் ஆட்சியிலிருந்த அரசாங்கமும் எடுத்துள்ள நடவடிக்கையும், பின்பற்றுகின்ற அணுகுமுறையும் தமிழீழ விடுதலைப் புலிகளதும் அதன் தலைமையினதும் பலத்தை எடுத்துக் காட்டப் போதுமானது.

இந்தப் பிரிவினையைத் தூண்டிய சக்திகள் அரசியல்ரீதியாகத் தமிழ் மக்கள் பலமடையக்கூடாது என்பதில் அதிக கவனம் கொண்டவர்களாக உள்ளனர். ஐக்கியமாக ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தனியாதிக்க சக்தியாகத் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்றம் செல்லக்கூடாது என்பதில் அந்தச் சக்திகள் அக்கறை கொண்டிருந்ததை உணர முடிகின்றது. ஆனால், இதனை கிழக்கு மக்கள் முறியடிக்க முயற்சிக்கின்றார்கள் என்பது அவர்களது வெளிப்பாடுகளிலிருந்து தெரிய வருகிறது.

இந்த தனிமனிதனது அரசியலை ஊடகங்களும், உளவுத்துறைகளும் தமது மனம் போன போக்கில் திசைதிருப்பிவிட்டன என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டியிருப்பதுடன், பிராந்திய வாதமாக மாற்றுவதிலும் அவை வெற்றி கண்டன. கிழக்கு அரசியல் - தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவதற்கான சந்தர்ப்பத்தைப் பாதித்துள்ளதென்பது வெளிப்படையான தாக்கமாகும். ஆனாலும், தமிழ்க்கூட்டமைப்பே அதிகமான ஆசனங்களை வடக்கு- கிழக்கில் பெறும் என்பதையும், தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் அடையப்படுவதற்கான உந்துதலாக அது அமையும் என்பதும் தெளிவான அம்சமாகும்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை ஐக்கிய தேசிய முன்னணி (UNP) வெற்றி பெறுவதையே அதிக தமிழ்மக்கள் விரும்பினர். காரணம் - தடைப்பட்டுப்போன பேச்சுவார்த்தை, சமாதான முயற்சி தொடரும் என்பதுடன், போர்நிறுத்தம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுமென்பதாலுமேயாகும். அந்தளவுக்கு தமிழர் போரால் பாதிப்படைந்துள்ளதுடன், சர்வதேச சமூகத்தின் (International Society) உதவி, மற்றும் ஒத்துழைப்பில் அதிக கரிசணைகொண்ட அரசாங்கமாக ஐ.தே.மு. காணப்படுகிறது. இதனால், சர்வதேச சமூகத்தின் வற்புறுத்தலுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென தமிழ்மக்கள் கருதுகின்றனர்.

இந்த சந்தர்ப்பத்தில் மூன்றாவது சக்தி பற்றி சில விடயங்களை அவதானிப்பது பொருத்தப்பாடுடையதாகும். மூன்றாவது சக்தியென்பது இலங்கை இனப்பிரச்சினையிலும் மற்றும் இலங்கையின் அரசியல் பொருளாதாரப் பிரச்சினையிலும் தவிர்க்கமுடியாத நம்பிக்கையையும், செல்வாக்கையும் கொண்டிருக்கின்றது.

இலங்கையின் சமாதானத்திற்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் சர்வதேச சமூகத்தின் பின்புலமும் உதவியும் அவசியமாகியுள்ள நிலையில், அதனை அனுசரித்து செயற்படும் ஐக்கிய தேசிய முன்னணியின் வருகையைத் தமிழ்மக்கள் ஆதரித்திருந்தனர். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் தனது ஆட்சியை நீடிக்க, தென்னிலங்கையை அபிவிருத்தி செய்ய, அரசியல் அதிகாரத்தில் நிலைத்து நிற்க சமாதானம் அவசியமானதாக விளங்குகின்றது.

இதுவே அவர்கள் சமாதானத்தை நேசிப்பதற்குக் காரணமாகும். சமாதானத்தின் மூலம் ஐக்கிய தேசிய முன்னணி - சிறுபான்மையினரின் ஆதரவைப் பெற்று நாடாளுமன்றத்தில் சாதாரணமான பெரும்பான்மையையாவது பெற்றுவிடலாமென கருதியது. எதுவாயினும் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி அமைத்தால், சமாதானம் நிலைக்குமென்ற நம்பிக்கை தமிழ் - முஸ்லிம் சிறுபான்மை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அடுத்த நிலையில், ஆட்சியமைக்கக்கூடிய அரசியல் சக்தியாக மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி (UPFA) கருதப்படுகிறது. இந்த முன்னணி பற்றி தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் அதிக விமர்சனங்கள் காணப்படுகின்றன.

முதலாவது - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கடந்தகால அரசியல் அணுகுமுறைகள் ஏமாற்றமளிப்பதாகவே அமைந்துள்ளன. சமாதானத்தின் காவலனாகக் காட்டிக்கொண்டு, 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தமிழ்மக்களின் ஆதரவைக் கூடுதலாகப் பெற்றவர், ஆட்சியின்போது நியாயப்படுத்தமுடியாத இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழ்மக்களைக் கொடுமையான வாழ்வுக்குள் தள்ளியவர். இன்று கூட அவர் பேசும் சமாதானம் ஏமாற்றுவதற்கானதும், அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கானதும் என்பதே பொதுவான நம்பிக்கையாக தமிழ்மக்களிடம் வளர்ந்துள்ளது.

இரண்டாவது - ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணியில் (PA) புதிதாக இணைந்துள்ள ஜனதா விமுத்தி பெரமுன (JVP) - சிறுபான்மையினர் பற்றிக்கொண்டிருக்கும் அரசியல் கொள்கை விரோதமான போக்கை வெளிப்படுத்துகின்றது. குறிப்பாக அதிகாரப் பரவலாக்கல், பாரம்பரிய தாயகக் கோட்பாடு, சுயநிர்ணயம் பற்றிய புதிய கூட்டமைப்பு - தமிழ் மக்களுக்குச் சாதகமான போக்கை கடைப்பிடிக்க முடியாத கொள்கைகளைப் பிரகடனப்படுத்தி வருகின்றது.

இதனால், தமிழர்கள் சுதந்திர ஐக்கிய மக்கள் முன்னணி ஆட்சியமைப்பதை நிராகரிக்கின்றனர். ஜனதா விமுத்தி பெரமுன இந்தக் கூட்டமைப்பில் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் - போரைத் தவிர்க்கமுடியாத காரணியாக மாற்றிவிடுமோ எனத் தமிழ்மக்கள் அஞ்சுகின்றனர். ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வதேச சமூகத்தின் அணுகுமுறைகள் இநதக் கூட்டணியை நிராகரிக்கமுடியுமா? எனற கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஏனெனில், உலக மயப்படுத்தல், பயங்கரவாதம் என்ற கோசங்களுடன் - உலகை ஒரு வலைப் பின்னலுக்குள் இணைப்பதற்கான அணுகுமுறை, மேற்குலக சக்திகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகிறது. அதனை முறியடிக்கும் விதத்தில் இலங்கையின் புதிய கூட்டணியின் ஆட்சி சாத்தியப்படுமாயின், மேற்கின் அணுகுமுறை எவ்வாறானதாக அமையும. குறிப்பாக இலங்கை - உலகநாடுகளின் உதவியை நம்பியே பொருளாதார, சமூகவிருத்திகளை ஏற்படுத்தும் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.









அவ்வாறான சூழலில், மேற்கை அனுசரித்தே இலங்கை போகவேண்டியது தவிர்க்க முடியாததது. இதே நிலையில், புதிய கூட்டணியில் முன்னாள் புரட்சியாளர்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கி ஆட்சியமைத்து, மேற்குக்குச் சார்பாக நடந்துகொள்ள முயலும்போது, கூட்டணி குழப்பமடையும்நிலை ஏற்படலாம் எனற கருத்தும் நிலவுகிறது. ஏனெனில், ஜே.வி.பியிரின் பிரதான நோக்கம் - நாடாளுமன்றததில் அதிகாரத்தைப் படிப்படியாகப் பலப்படுத்துவதாகும். அதற்காகவே ஒருகூட்டணி அமைப்பதற்கு உடன்பட்டிருப்பதுடன், இதே கருத்தையே பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர்களும் கொண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது அம்சம் - ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை, ஜனாதிபதி திட்டமிட்டே கலைத்திருந்தார். அதில் ஜனாதிபதி கூறிய காரணம் எதுவும் தமிழ்மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதுள்ளது. அவை அதிகாரத்தை பெறுவதும், தமிழர்களின் சமாதானம் சார்பான போக்கும், அதிகாரப்பகிர்வு பற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான வரைபையுமே ஆட்சி கலைப்புக்குக் காரணமெனத் தமிழ்மக்கள் கருகின்றனர். இதனாலும், மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் ஆட்சியை நிராகரிக்கின்றனர்.

எனவே, புதிய கூட்டணிக்கு இரண்டு பிரதான பிரச்சினைகள் உண்டு. ஒன்று சர்வதேச சமூகத்தை அனுசரித்து செயற்படவேண்டும் என்ற நிர்பந்தம், இரண்டாவது - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுவதுபோல் ஆட்சியமைத்த பின்பும், விடுதலைப் புலிகளுடன் தெளிவான அணுகுமுறையைப் பின்பற்றி சமாதான முயற்சியை தொடரவேண்டுமென்பதாகும். ஜனாபதி இவற்றை தேர்தலுக்கான பிரசாரமாக மட்டும் கருதினாலும், யதார்த்தத்தில் இத்தகைய அணுகுமுறையின்றி இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு மட்டுமல்ல, முழு இலங்கைக்குமான பொருளாதார அபிவிருத்தியும் சாத்தியப்பாடுடையதாக அமையுமென எதிர்பார்க்கமுடியாது.

இந்தத் தேர்தலில், தமிழர் தரப்பில் எழுச்சியடைந்துள்ள கூட்டமைப்பு தெளிவான தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கொண்டிருக்கின்றது. இராணுவரீதியில் பிரிந்து செல்லுகின்ற வலுவை மட்டும் கொண்டிருக்கும் இனமாக மட்டும் தமிழர் கருதப்படாது, அரசியல்ரீதியிலும் பிரிந்து செல்வதற்கான ஆணையைப் பெறுகின்றதாகவும், வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. இதேபோன்று 1977 களிலும் தமிழ் மக்கள் தனியரசுக்கான கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். எனவே, இந்தத் தேர்தல் தென்னிலங்கையில் பாரிய திருப்பங்களை ஏறபடுத்தாது விட்டாலும், வட-கிழக்கு அரசியலைப் பொறுத்து தென்னிலங்கை அதிக சாத்தியமான அணுகுமுறைகளைப் பின்பறறத் தவறினால் நெருக்கடிகளை எதிர்நோக்கும.

உலகமும், விடுதலைப் புலிகளும் புதிய அரசாசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்கும் சக்திகளாக அமைவதுடன், இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பவர்களாகவும் விளங்குவார்கள். இதில், பிராந்திய சக்திகள் இலங்கையின் பாதுகாப்புக்கு மட்டுமே உதவ முடியுமேயன்றி (?), பொருளாதார அபிவிருத்திக்கு எந்த அடிப்படையிலும் உதவமுடியாது. ஆனால், மேற்கு நாடுகள் அல்லது சர்வதேச சமூகத்தினர் இலங்கையின் பாதுகாப்பையும், பொருளாதாரத்தையும் சமமாக வளர்த்தெடுக்கக்கூடிய நிலையிலுள்ளன என்ற அடிப்படையில் நோக்குவது பொருத்தப்பாடுடையது.

---

## பார்வைகள் பதிவுகள் பகிர்வுகள்

இங்கு ஒரு திரைப்படம் பற்றி பகிர முற்படுகிறேன். குப்பைக் கூடையான தமிழ் சினிமாவில் வந்த ஒரு நல்ல திரைப்படம் பற்றியே இங்கு விபரிக்க முயல்கிறேன்.

அண்மை ஆண்டுகளில் தமிழ் சினிமாக் குப்பைகளுக்கு மத்தியில் மணிகளாகச் சில நல்லவை வந்துள்ளன. புத்திஜீவித்தனமானோர் கூறும் கலைப்படமல்ல. சினிமா என்பது கலை. அந்தக் கலையில் குப்பையும், நல்லவையும் உண்டு. கலைப் படமெனறு ஒரு தனி வகையாக எப்படி உருவாக முடியும். சினிமா என்ற கலையில் நல்லது அல்லது கூடாது என்ற பகுப்பே இருகக முடியும்.

தமிழ்க் குப்பை சினிமாக்களுள் நல்லவையாக, அதேவேளை அதிக மக்களால் ரசிக்கப்பட்டவையாக அண்மை ஆண்டுகளில் வெளியானவையுள் சிறந்தது என விருமாண்டியைக் குறிப்பிடலாம். மரண தண்டனைக்கு எதிரான ஒரு குரல் என்ற மனித நேயக்குரலாக விருமாண்டி வந்துள்ளது. ராஜீப் கொலை வழக்கில் அப்பாவித்தனமான 26 பேருக்கு இந்திய நீதிமன்றம் மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டபோது, அங்கு மரணதண்டனைக்கெதிராக ஒரு இயக்கமே நடத்தப்பட்டது என்பதை இங்கு குறிப்பிடவேண்டும்.

விருமாண்டியின் கதை எல்லா விமர்சனங்களிலும் விளக்கப்பட்டதால், அந்தக் கதை மாவை இங்கு திருப்பி அரைக்கவில்லை. தனது வழமையான படங்களின் மேல்நிலை நாயகத் தன்மையிலிருந்து ஓரளவு விலகியிருக்கிறார் விருமாண்டி கமலஹாசன்.

ஆரம்பத்தில் ஒரு விவரணத் தன்மையாகக் கதை ஆரம்பமாகின்றது. மரண தண்டனைக்கெதிராகக் குரல்கொடுக்கப் பெண்ணொருவர் - மரண தண்டனைக் கைதிகளை நேர் கண்டு, விடியோ விவரணம் தயாரிக்க ஒரு சிறைக்குச் செல்கிறார். அந்தக் காட்சிகள் விவரணத்துக்குரிய உண்மைத் தன்மையுடன் ஒரு கமராவுடன் நகர்கின்றது. கமராவின் இயல்பான அலையும் தன்மை, இயற்கையான ஒளிகள் என அது நகர்கின்றது. ஒரு சினிமாவைப் பார்ப்பதான உணர்விலிருந்து விலகி, ஒரு உண்மை உலகில் இருப்பதான விம்பத்தை அது ஏற்படுத்தியது. இந்தத் தளத்தில் விருமாண்டியும், அவரது எதிரியான கொத்தாளத் தேவரும் நுழைகின்றனர். கொலை செய்த கொத்தாளத் தேவருக்கு ஆயுள் தண்டனை. கொலை செய்யாத விருமாண்டிக்கு மரணதண்டனை என்பது தீர்ப்பு.

முதலில் கொத்தாளத் தேவரிடம் நேர் காணப்படுகின்றது. அவரது தளத்தில் அவர் கூறுவது - கதையாக நகர்கிறது. அங்குதான் சினிமா பாணியில் சினிமா ஆரம்பமாகின்றது. கொத்தாளத் தேவர் தன்னை நியாயப்படுத்தி, கதையைச் சொல்கிறார். அதுமுடிய விருமாண்டியிடம் நேர்காணப்படுகின்றது. கொத்தாளத் தேவர் சொன்ன அதே கதைப்புலத்தை விருமாண்டி தன் தளத்தில் கூறுகிறார். ஒரே கதை - கொத்தாளத் தேவர் மறைத்த - மாற்றிய பகுதிகளை விருமாண்டி சொல்கிறார். அந்தக் கதை சொன்ன தளம் மிகச்சிறப்பானது. தமிழ் சினிமாவில் புதியமுறை. சினிமாவுக்குரிய மிகை புனைவு அங்கில்லை.

இசையைப் பொறுத்தவரை இசை எங்குமே கதையை மீறி மேல் எழவில்லை. கதையை இசை காத்து நிற்கின்றது. கமரா - கமராவின் இயல்பான தன்மையுள்ளது. செயற்கையான ஒளி அமைப்புக்கள் தென்படவேயில்லை. ஒரு சினிமாவின் கதை நன்றாகவுள்ளது, இசை நன்றாகவுள்ளது, கமரா நன்றாகவுள்ளது, ஒழுங்கு நன்றாகவுள்ளது என்று சொல்லப்போனால் - மற்றவற்றில் ஏதோ குறைபாடு உள்ளது என்ற பொருளைக் கொண்டுவரும். விருமாணடியில் ஒன்றையொன்று விஞ்சும் தன்மை எதுவும் இல்லாதது ஒரு சிறப்பு.

மரணதண்டனை தொடர்பாக மனித மனங்ளை உலுப்பி விடுவதாக விருமாணடி உள்ளது. மரணதண்டனைக்கு எதிராக விவரணம் செய்யும் பெண் - தமிழகத்தில் கீழ் வெண்மணிக் கிராமத்தில் சாதிப் பாகுபாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களைச் சேர்ந்தவள் என்பதைதான், கீழ் வெண்மணி என்ற ஒற்றைச் சொல்லில் கூறியதன்மூலம் வெளிப்படுத்துகிறார்.

அண்மை ஆண்டுகளில் தமிழில் வெளியான மக்கள் மயப்பட்ட நல்ல படங்களான பாரதி கண்ணமா, பொற்காலம், வெற்றிக் கொடிகட்டு, தேசியகீதம், பாண்டவர்பூமி, ஆட்டோக்கிராப், அழகி, சொல்லமறந்த கதை, தென்றல், காக்கக்காக்க, அன்பே சிவம், இயற்கை, பாரதி, முகம், மோகமுள், ஹேராம் உள்ளிட்டவற்றில் விருமாண்டி மட்டுமே நிகழ்கால மனிதநேயத்தின் குரலாக - மக்களின் பிரச்சினையைத் தொட்டு நிற்கின்றது.

- திரு. த. திரு -

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வினைக்குரிமை நாடிய பின்றை அவனை*
*அதற்குரியன் ஆகச் செயல்.*

திருக்குறள்

## நமது நோக்கு

### புதிய பிரதமர் கதிர்காமரல்ல...

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் புதிய பிரதமருக்கான பதவிக்கதிரையைக் கைப்பற்றும் போட்டியில் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவரும், சிங்கள பௌத்த மக்களின் காவலன் எனப் பௌத்த சங்கத்தைச் சேர்ந்தவர்களால் கிரீடம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டவருமான மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்று இலங்கையின் 13 ஆவது பிரதமராகியுள்ளார். இந்தப் பதவிக்கு - தேர்தலுக்கு முன்பிருந்தே சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரால் பிரஸ்தாபிக்கப்பட்டு நேற்று முன்தினம் வரை பரபரப்பாகப் பேசப்பட்டநபரான முன்னாள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெளியுறவு அமைச்சரும் இந்நாள் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகருமான லக்ஸ்மன கதிர்காமர் இறுதிநேரத்தில் அப்பதவியில் அமர்த்தப் படவில்லை.

இதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை.

ஆனாலும், கூட அவருக்கு அந்தப்பதவி வழங்கப் படாமைக்கு ஜனாதிபதிக்கு பேரினவாத சக்திகள் - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் புதிய அரசுக்கு வெளியேயிருந்து ஆதரவளிக்க சம்மதித்திருக்கும் பௌத்த மத அடிப்படைவாதக் கட்சியினரான ஹெல உறுமயக்காரர்கள் கொடுத்த அழுத்தங்களே காரணம் என்று கூறப்படுகிறது. இலங்கை அரசியலில் பிரதமர் எனப்படுபவர் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார வலுவின் கீழ் அவரது அனுசரணையுடன் மட்டும் இயங்கக் கூடிய பலமற்ற... அதிகார சுதந்திரமற்ற ஒரு இரண்டாம் நிலைத்தலைவர் என்பது தெரிந்தவிடயமே.

எத்தகைய மக்கள் செல்வாக்கைப் பெற்ற தலைவராக இருந்தாலும் சரி ஜனாதிபதியின் விருப்பத்திற்கு மாறாக தேச நலன் சம்பந்தப்பட்ட விடயங்களிலும் கூட சுதந்திரமாக செயற்படும் உரிமைகள் மறுக்கப்பட்ட, அப்படிச் செயற்பட்டால் ஜனாதிபதியின் சினத்திற்கு ஆளாகி பதவி நீக்கத்திற்கு ஆளாகக் கூடிய ஒருவராகவே இலங்கையில் பிரதமர் பதவியை வகிக்கும் நபர் உள்ளார் என்பது வெளிப்படையான ஒன்று தான்.

அத்தகைய அதிகாரமற்ற 'பொம்மை' பதவியைத்தான் ஜனாதிபதி சந்திரிகா கதிர்காமருக்கு வழங்க தீர்மானித்திருந்த போதிலும் அது வெறும் பெயருக்கான ஒரு பதவியாக இருந்தாலும் கூட இலங்கையின் இரண்டாவது உயர் பதவி என்பதால் அதனை ஒரு தமிழருக்கு கொடுப்பதில் சிங்கள பௌத்த அரசியல் மற்றும் மதத்தலைமைகளுக்கு எவ்விதத்திலும் சம்மதமில்லை என்றே கூறப்படுகிறது.

1990 ஆம் ஆண்டின் இறுதியில் சந்திரிகா சமாதானப் புறாவாக வேஷமிட்டு தேர்தல் களமிறங்கி பெரும் மக்கள் ஆதரவுடன் ஆட்சிபீடம் ஏறிய போது நாட்டின் அதிமுக்கிய பதவிகளில் ஒன்றான வெளியுறவு அமைச்சர் பதவிக்கு முன்பின் அரசியல் அரங்கில் அடிபடாத பெயருக்குரிய புதுமுகமான லக்ஷ்மன் கதிர்காமரை நியமித்த போது தமிழ் மக்கள் மூக்கில் விரலை வைத்து வியந்தே போயினர். சந்திரிகா உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வை வழங்குவார் என்றே நம்பினர்.

ஆனால், வரலாறு வேறு விதமாகவே இந்தப் பதவி நியமனத்திற்கான காரணத்தை இப்போது பதிந்துவைத்துள்ளது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தி அதனைப் பயங்கரவாத நடவடிக்கையாக உலகிற்குப் பிரசாரம் செய்து சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் தமிழ் மக்களுக்கு எதிரான போரை தீவிரப்படுத்தவும், விடுதலைப் புலிகளைப் பூண்டோடு அழிக்கவும் ஒரு தமிழரைப் பயன்படுத்த நினைத்த சதியின் காரணமாகவே கதிர்காமரின் அந்த நியமனம் அமைந்தது.

தமிழர் கையைக் கொண்டே தமிழர் கண்ணைக் குத்தும் திட்டத்தை பொறுப்பேற்றே கதிர்காமர் அப்போது அமைச்சரானார். கொடுத்த பணியை விசுவாசமாக ஆனால் தமிழினத்திற்கு துரோகம் செய்யும் வகையில் மேற்கொண்டார். அது குறித்து விளக்க வேண்டிய தேவையில்லை.

ஜனாதிபதிக்கு விசுவாசமாக, பதவிபக்தியோடு கதிர்காமர் செயற்பட்டதன் காரணமாக ஆட்சி மாறியதும் ஜனாதிபதி அவரைத தன் வெளிவிவகார ஆலோசகராக நியமித்தது மல்லாமல் ஒரு அமைச்சருக்கான பாதுகாப்பு உட்பட சகல வசதிகளையும் செய்துகொடுத்தார்.

சமாதான பேச்சுவார்த்தைக் காலத்திலும் ஜனாதிபதியின் குரலாக, சமாதான நகர்வுகளுக்கு எதிரான கருத்துக்களை இன்னும் தெளிவாகக் கூறுவதானால் மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்கத் தூண்டும் பிரசாரங்களை மீண்டும் தீவிரமாக்கினார். குறிப்பாக இந்தியாவை சமாதான முயற்சிகள் மீது எரிச்சல் கொள்ளவைக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

அந்த விசுவாசத்திற்கு கைமாறாக மட்டுமல்ல அவரைப் பிரதமராக்குவதன் மூலம் தமிழர் ஒருவருக்கு நாட்டின் இரண்டாம் நிலைப் பதவியை (அது செயலற்ற-அதிகாரமற்ற பதவி யென்பது வேறு விடயம்) வழங்குவதன் மூலம் தமிழர் உரிமைப்பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளிவைத்து தன்னை மீண்டும் ஓர் சமதர்ம வாதியாக காட்ட முயன்ற சந்திரிகாவின் திட்டத்தை சிங்கள பௌத்த பேரினவாதம் ஏற்கவில்லை என்பது ஊர்ஜிதமாயிற்று.

கதிர்காமருக்கான பிரதமர் கதிரை மஹிந்தராஜ பக்ஷவிடம் போய்ச் சேர்ந்துவிட்டது. பௌத்த சிங்கள அரசுக்கு எஜமான விசுவாசத்துடன் செயற்பட்டாலும் தமிழர் என்றால் நிரந்தர அடிமையாகவே இருக்க வேண்டும் என்ற பேரினவாதக் கோட்பாடு இதன் மூலம் மீண்டும் உறுதிசெய்யப் பட்டுள்ளது.

கதிர்காமருக்கு இனஉணர்வு - இனமானம் இருந்தால் இதெல்லாம் புரியும்

அது தான் அவரைவிட்டுப்போய் ஒரு தசாப்தமாகிறதே.

## நாடும் நடப்பும்

செய்தி :- கதிர்காமரல்ல ராஜபக்ஷவே பிரதமர்....




# முடிவடைந்த நாடாளுமன்ற தேர்தல் திருப்திகரமாகவே நடைபெற்றது

## அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நடந்துமுடிந்த தேர்தல் திருப்திகரமாக உள்ளதென யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

கடந்த இரண்டாம் திகதி இடம்பெற்ற தேர்தல் தொடர்பான கூட்டமொன்று, யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இந்தமுறை யாழ்.மாவட்டத்தில் திருப்திகரமான வகையில் தேர்தல் கடமைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மிகவும் சிறந்த ஒழுங்கமைப்புடன் இந்தமுறை தேர்தல் நடநது முடிந்திருப்பதால், யாழ்.மாவட்டத்தில் தேர்தலில் கடமைபுரிந்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்தமுறை நடைபெற்ற தேர்தலைவிட இந்தமுறை சிறந்த ஒழுங்கமைப்புடன் தேர்தல் இடம்பெற்றுள்ளது.

முறைகேடுகள், மோசடிகள் பெருமளவில் இடம்பெற்றதாகக் கூறமுடியாது. வழமையாக தேர்தல் காலத்தில் நடைபெறுவதைப்போல் சில சம்பவங்கள் இடம்பெற்றிருந்தாலும், ஏனைய மாவட்டங்களைவிட முறைகேடுகள் இங்கு குறைவாகவே இடம்பெற்றுள்ளன.

தேர்தல் ஆணையாளர்கூட இந்தமுறை இடம்பெற்ற தேர்தல் - ஜனநாயக அடிப்படையில் நடைபெற்றிருப்பதாகக் கூறியுள்ளார். அதன்படியே எமது மாவட்டத்திலும் இந்தத் தேர்தல் சிறப்பாக இடம்பெற்றுள்ளதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பொதுமக்கள், பத்திரிகைகள், ஒழுங்கமைப்பாளர்கள் என சகல தரப்பினரும் தேர்தல் ஒழுங்குவிதிகளைச் புரிந்து கொண்டு சிறப்பாக ஒத்துழைப்பு வழங்கியுள்ளமை, யாழ்.மாவட்டத்தில் இந்தமுறை தேர்தல் சிறப்பாக இடம்பெறப் பெரிதும் உதவியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் எஸ்.நடராஜா -

இந்தமுறை எதிர்பார்த்ததைவிட சிறப்பாகத் தேர்தல் இடம் பெற்றுள்ளது. வன்முறைச் சம்பவங்கள் மற்றும் தேர்தல் முறை கேடுகள் என்பன மிகக்குறைவானதாகவே பதியப்பட்டுள்ளன.

உண்மையில் யாழில் ஒரு ஜனநாயகரீதியிலான தேர்தல் இடம்பெற்றிருக்கிறது எனத் தெரிவித்தார்.

(202,ப)

## வரணியில் வாள்வெட்டுச் சம்பவம்

# சந்தேகநபர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தவும்

## பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவு

வரணி வடக்குப் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர் ஒருவர் வாளால் வெட்டப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டவர்களை, அடையாள அணி வகுப்பிற்கு உட்படுத்துமாறு சாவகச்சேரி நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த சனிக்கிழமை வரணி வடக்கிலுள்ள சின்னத்தம்பி சிவஞானம் என்பவரின் வீட்டினுள் அத்துமீறிப் பிரவேசித்த கும்பலொன்று அவரை வாளால் வெட்டியுள்ளது.

ரஞ்சன் என்பவர் தலைமையிலான பத்துப்பேர்கொண்ட கும்பலே தன்னை வாள்ல் வெட்டி படுகாயப்படுத்தியதாக சின்னத்தம்பி சிவஞானம் - கொடிகாமம் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டையடுத்து சந்தேகநபர்கள் நால்வரையும் கைதுசெய்த கொடிகாமம் பொலிஸார், சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் அவர்களை ஆஜர்செய்தனர்.

இவர்கள் நால்வரையும் இன்றுவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ள சாவகச்சேரி நீதிவான் சுப்பிரமணியம் - சந்தேகநபர்களை அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துமாறு கட்டளையிட்டார்.

இதேவேளை - குறித்த சின்னத்தம்பி சிவஞானம் என்பவர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவுதேடும் வகையில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாகவும், இதையடுத்தே பழிவாங்கும் நோக்கில் மாற்றுக்கட்சியைச் சேர்ந்தவர்களால் இவர் வெட்டப்பட்டிருந்ததாகவும் பாதிக்கப்பட்டவர்களது உறவினர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

## இராணுவ பிக்கப் வாகனம் மோதி பொதுமகன் ஒருவர் படுகாயம்!

இராணுவத்தினரது பிக்கப் வாகனத்துடன் மோதி பொது மகன் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் தென்மராட்சி - கெருடாவில் பகுதியில் இடம்பெற்றது.

கொடிகாமம் - போக்கட்டிப் பகுதியைச் சேர்ந்தவரான இராயப்பு அருள்நேசன் (வயது 29) என்பவரே விபத்தில் சிக்கி படுகாயமடைந்தவராவார்.

நேற்று முன்தினம் மாலை, மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்குச் சென்றுவிட்டு, மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தவேளை, அவரைத் தாண்டி வேகமாகச் சென்ற இராணுவத்தினரின் பிக்கப் வாகனம் எதிர்பாராத விதமாக திடீரென நிறுத்தப்பட்டதனால், பின்னால் வந்துகொண்டிருந்த குறித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து இராணுவத்தினரின் பிக்கப் வாகனத்துடன் மோதியது.

இதனால், படுகாயமடைந்த இந்த இளைஞன் பின்னர், படையினரால் மீட்கப்பட்டு, சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டார். (202)

*வடக்கு – கிழக்கில்*

## தேர்தலை ரத்துச்செய்யும் அதிகாரம் எனக்குக் கிடையாது

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தேர்தலை மீண்டும் நடத்துமாறு சில தமிழ் அரசியற்கட்சிகள் தேர்தல் ஆணையாளரிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வேண்டுகோள் விடுத்திருந்தன.

ஆனால் 48 (ஏ) பிரிவின்படி தேர்தலை நடத்த தனக்கு அதிகாரம் கிடையாதென தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இதனையடுத்து வடக்கு - கிழக்கில் தேர்தல் முறைகேடாக நடந்திருப்பதாகக் கூறியுள்ள ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகள் - தாங்கள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகவும் தெரிவித்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியும், இவர்களுடன் இணைந்து வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரியவருகிறது. மோசடி செய்த வாக்குச்சாவடிகளில் வாக்குகளை ரத்துச்செய்வது குறித்து இறுதிமுடிவு எடுப்பதற்காக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஆராயவுள்ளார்.

**கணினியியல்** **ராஜ்காந்த்**

# தமிழில் செயலாற்ற வழிவகுக்கும் விண்டோஸ் XP

உலகின் முதல்தர கணினி மென்பொருள் நிறுவனமாக மைக்கிரோ சொவ்ற் (**Microsoft**) நிறுவனமானது, தனது புதிய இயங்குதளமான (**Operating System**) விண்டோஸ் **XP** 2002 இல் வெளியிட்டமை அனைவரும் அறிந்ததே.

இந்தப் புதிய இயங்குதளமானது, தமிழ பழைய இயங்குதளங்களான விண்டோஸ் 3.11, 95, 98, **Me, Nt,** 2000 ஆகியவற்றின்




மூலம் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டமை இதற்கு **Windows eXPerianse** என்று பெயரிட்டு, அதனைச் சுருக்கமாக விண்டோஸ் **XP** என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

விண்டோஸ் **XP** யானது பழைய இயங்குதளங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டுச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுப் பாவனையாளரின் மனதினைக் கொள்ளைகொண்டமையால், இதைப் பாவித்த அனைவரும் **XP** எனப் பெயர் சூட்டப்பட்டமை, மிகச் சரியானதே என்று கூறி மகிழ்கின்றனர்.

இவ்வாறு சிறப்பான பல வசதிகள் இணைக்கப்பட்டுள்ள விண்டோஸ் **XP** யில், தமிழ்மொழியும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் மிகச் சிறப்பான விடயமாகும். இவ்வாறு தமிழ்மொழி உள்ளடக்கப்பட்ட விடயமானது பலருக்கும் தெரியும். ஆனால்

**படம் - 1** 06 ஏப்ரல் 2004




இன்றும், பல கணினிப்பயன்பாட்டாளர்கள், சில விரிவுரையாளர்கள் போன்றோர்கூட அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்று அறியாமலும் அல்லது அறிந்தும் அதைப் பயன்படுத்தாமலும் உள்ளனர்.

விண்டோஸ் **XP** யானது தமிழுடன், 11 தெற்காசிய நாடுகளில் பணியாற்றக்கூடியது என்பது இங்கு குறிப்பிடக்கூடிய விடயமாகும். மேலும் தமிழானது விண்டோஸ் 2000, **Me** ஆகியவை வெளிவந்தபோதே, விண்டோஸ் இயங்குதளத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது. அதன்பின்னரே ஏனைய மொழிகள் இணைக்கப்பட்டன. காரணம் தமிழ்மொழியானது இணையத்தில் செலுத்திவந்த ஆட்சியும், மைக்ரோ சொவ்ற் நிறுவனத்தில் பணிபுரிந்து வரும் **30%** மான தமிழர்களின் அதீத முயற்சியுமாகும்.

மேலும் விண்டோஸ் 2000, **Me** யைவிட **XP** யிலேயே தமிழ்மொழி சிறப்பாக இயங்குவதுடன், நேரம், திகதி, நாணய அலகு போன்றவை கூடத் தமிழில் மாறிவருகின்றன. விண்டோஸ் **XP** யானது யுனிகோட் (**Unicode**) தர முறைக்கு ஆதரவளிப்பதால், இதை இலகுவில் பயன்படுத்த முடிகிறது. மேலும் தமிழில் பணியாற்றுவதற்கு எந்தவிதமான மேலதிக எழுத்துருக்களையோ, மென் பொருட்களையோ நிறுவத்தேவையில்லை. இவை விண்டோஸ் **XP** யுடனேயே உள்ளிணைக்கப்பட்டுள்ளன.

விண்டோஸ் **XP** யானது நிறுவப்படும் போது இந்தப் பன்மொழி வசதிகள் தானாக நிறுவப்படுவதில்லை, நாமாகவே தேர்ந்தெடுத்து நிறுவவேண்டும். தமிழில் பணியாற்ற விண்டோஸ் **XP** யில் லதா (**Latha**), ஏரியல் யுனிகோட் (**Arial Unicode**) ஆகிய எழுத்துருக்கள் இணைக்கப்பட்டுள்ளன. இயல்பாக லதா எழுத்துருவே தேர்ந்தெடுக்கப்படும்.

இந்த வசதி நிறுவப்படும்போது ஆங்கிலத்துடன், தமிழையும் மாறிமாறி உள்ளிடலாம். **Task Bar** இல் தெரியும் **Languaege Bar** இல் (படம்-1) ஆங்கிலம் பணியில் உள்ள போது **EN** எனவும், தமிழில் பணியில் உள்ள போது **TA** எனவும் தெரியும்.

இனி எவ்வாறு தமிழை நிறுவிப் பணியாற்றுவது என்று பார்ப்போம். **Start >Contorl Panel>Date,Time, Languages and Reginal Options** இற்குச் செல்லவும். அங்கு **Languages Tab** இல், **Install File for Complex Script and Right - to -Left Languages (Including thai), Install East Asian Languages,** ஆகிய **Chek Box** களைத் தெரிவுசெய்யவும். பின்னர் **CD-Rom** இல், **Windows XP CD** யை நுழைத்து, **Ok** யைக் கிளிக் செய்ய பிராந்திய மொழிகள் அனைத்தும் நிறுவப்படும்.

பின்னர் - **Reginal Options Tab** ,இல் **Standarts and Formats** என்பதின் கீழுள்ள **Drop Down Box** இல் **Tamil** என்பதையும். **Iocation** என்பதில் **Srilanka** என்பதையும்

1. On this calendar, click a bold date.

< ஏப்ரல் 2004 >

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

**படம் - 3**

தெரிவு செய்து **Apply> Ok** என்பவற்றைக் கிளிக் செய்க.

இதன்பின்னர் கணினியின் திகதி, நேரம், நாணயம் ஆகியவை தமிழ் மொழி வழக்கிற்கு மாறிவிடுவதைக் காணலாம். (படம்-3) உதாரணமாக **mm/dd/yyyy** என்றுள்ள திகதி **dd/mm/yyyy** எனவும் (**d - Date> M-Month, Y-Year) 123,456,789.00** என்றுள்ள இலக்கமுறை 12,34,56,789.00 என்று




நாணயக் குறியீடு ரூ 12,34,56,789,00 என்று மாறிவிடுவதையும் நேரத்தில், **AM,PM** ஆகியவை - காலை, மாலை எனவும், ஆங்கிலத்தில் உள்ள நாள், மாதத்தின் பெயர்கள் தமிழில் மாறுவதையும் காணலாம்.

இதில் நடைபெறும் மாற்றங்கள், **Excel, Access** ஆகியவற்றின் **Curancy Rate** ஐயும், **Word, Power Point** போன்ற அனைத்து மென்பொருட்களின் திகதி அமைப்பையும் தமிழில் மாற்றிவிடுவதைக் காணலாம்.

இனி அனைத்து மென்பொருட்களிலும், தமிழால் தகவல்களை உள்ளிடலாம். ஏன்? நாங்கள் ஏற்கனவே தமிழ் எழுத்துருக்களைப் பயன்படுத்தித் தகவல்களை உள்ளிட்டு அச்சு வேலைகளையும், இணையத்தள வடிவமைப்புக்களையும் செய்து வருகிறோமே, அதைவிட இதில் என்ன சிறப்பு உள்ளது என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், நீங்கள் தற்போது பயன்படுத்திவரும் எழுத்துருக்கள் **ACSII Code** எனப்படும் அமெரிக்க மொழியிலான குறியீடுகளாகவே சேமிக்கப்படுகின்றன. அதாவது, ஆங்கிலமாகவே சேமிக்கப்படுகிறது.

தமிழ் எழுத்துருக்கள் (**Fonts**) இல்லாத கணினியில் இதைத் திறக்கும்போது (**Open**) புரியாத ஆங்கிலக் குறியீடுகளைக் காணலாம். ஆனால், இங்கு, விண்டோஸ் **XP** யில் தமிழானது உலகளாவிய மொழிகளுக்கான குறியீடான **Uni Code** இல் தமிழ்மொழிக்கு ஒதுக்கப்பட்ட குறியீடுகளைக் கொண்டு தமிழ், தமிழாகவே சேமிக்கப்படும். இதை முறையில் **Uni Code** முறையில் செயற்படும் எந்தவொரு கணினியிலும் பார்வையிடத் தமிழ் எழுத்துருக்கள் அவசியமில்லை. இது **Uni Code** இன் சிறப்பம்சமாகும்.

தமிழ் நிறுவப்பட்டபின் எந்த மென்பொருளினைந்தும் அதில் தமிழ் தகவல்களை உள்ளிடலாம். கோப்புக்களின் பெயரைத் (**File Name**) தமிழில் அமைக்கலாம். தமிழில் **Icon** களிற்குப் பெயரிடலாம். **Folder** களுக்




கும் தமிழில் பெயரிடலாம். இதில் அளிக்கப்படும் பெயரே **Tittle Bar** இல் தெரிவதையும் காணலாம்.

**Search Box** இல் தமிழில் உள்ளிட்டு **File** களைத் தேடலாம். ஆங்கிலத்தில் தகவல்களை உள்ளிடும்போது, தமிழுக்கு மாற விரும்பின் **Key Board** இல் இடதுபக்க **Alt+Shift Key** ஐ அழுத்த **Task Bar** இல் தெரியும். **EN** என்பது **TA** ஆக மாறிவிடும். இப்போது தானாகவே லதா எழுத்துரு தெரிவு செய்யப்பட்டுவிடும். ஆகவே தமிழில் தகவல்களை உள்ளிடலாம். பின்னர் இடப்பக்க **Alt+Shift** அழுத்தி ஆங்கிலம் - தமிழுக்கும் மாறி மாறித் தட்டச்சுச் செய்யலாம்.

இந்தியாவின் பூனாவில் உள்ள **Modular Systems** உருவாக்கிய தமிழ் விசைப் பலகையின் அடிப்படையில் லதா எழுத்துரு அமைக்கப்பட்டுள்ளது. இது நாம் வழக்கமாகப் பயன்படுத்தும் தட்டச்சு விசைப் பலகையில் இருந்து மாறுபட்டது. எனவே - எந்தெந்தக் **Key** க்கு எந்தெந்த எழுத்துக்கள் (படம்-2) என்று தெரியாதவர்கள், இந்த விசைப் பலகையைப் பயன்படுத்துவதற்காக விசைப் பலகை அமைபும் விண்டோஸ் **XP** யுடன் இணைக்கப் பட்டுள்ளது.

**Start > Programs > Accosories> on Screen key board** வழியாக இந்த விசைப் பலகை அமைப்பை வரவழைத்துக் கொள்ளலாம். இதைப் பார்த்தபடியே தமிழில் தட்டச்சுச் செய்யலாம். இந்த விசைப்பலகையானது, **Shift** விசையை எழுத்தும்போது வரக்கூடிய எழுத்துக்களையும் அழுத்தாதபோது வரக்கூடிய எழுத்துக்களையும். ஆங்கிலத்திற்கு மாறும்போது ஆங்கில் விசைப் பலகையாகவும், தானாகவே மாறிவிடுவதைக் காணலாம். அத்துடன், நேரடியாக திரை விசைப் பலகை எழுத்தின் மீது கிளிக் செய்தும், தட்டச்சுச் செய்து கொள்ளலாம் என்பதும் இதன் சிறப்பம்சமாகும். இதைப் பற்றிய மேலதிக விளக்கங்கள் **www. Microsoft.Com/globaldev/Keyboard.asp** என்ற மைக்ரோசொவ்ரின் உத்தியோகபூர்வத் தளத்தில் அறிந்துகொள்ளலாம்.

இன்று நாம் வாழும் தகவல் தொழில்நுட்ப தளத்தில் 'தாய் மொழியில் கல்வி' என்னும் நிலைபோய் 'தாய் மொழியில் கணினிக் கல்வி' என்னும் நிலை உருவாகிவருகிறது. ஏராளமான விளையாட்டுக்கள் (**Games**) அச்சக மென்பொருட்கள், (**DTP Software**), அலுவலக மென்பொருட்கள் (**Office Softwares**) எனப்பல வகையில் தமிழ்மென்பொருட்கள் உருவாக்கப் பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், வெகுவிரைவில் அடிப்படை ஆங்கிலம் தெரியாதவர்கள் கூடத் கணினியைத் தமிழ்மூலம் இயக்கும் இயங்குதளம்கூட உருவாக்கப்பட்டு விடலாம் என்று அந்தப் பொன்நாள் வரும் என்று அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருப்போம். அந்நாள் வெகுதூரத்தில் இல்லை.

---

**துரோகங்களும் துக்கோற்பத்திகளும்**

## காக்கைவன்னியன் முதல் கருணா வரை

### (நாலாம் பகுதி)
### உமாமகேஸ்வரனின் துரோகத்தனம்

மொனராகல மாவட்டத்தில் ஒரு நில அளவையாளராகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளையின் முக்கிய பொறுப்புக்களையும் வகித்துக்கொண்டிருந்த உமாமகேஸ்வரனுக்கு - விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் எழுபதுகளின் பிற்பகுதியிலும், எண்பதுகளின் ஆரம்பத்திலும் முக்கிய இடத்தை அளித்தது.

மதுபானம், புகைபிடித்தல், பாலியல் விடயங்களுக்கு எந்தவகையிலும் இடம் கொடுக்காமல் மிக இறுக்கமான ஒரு அமைப்பாக விடுதலைப் புலிகள் தமக்குத்தாமே கட்டுப்பாடுகளை விதித்துக்கொண்டு, தமிழின விடுதலைக்காக உழைத்துக கொண்டு வந்தார்கள். இந்தக் கட்டுப்பாடுகளை முதலில் ஏற்றுக் கொண்ட உமாமகேஸ்வரன்- அவற்றை பின்னர் கைவிட்டு விட்டு ஒரு காலத்தில் கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய ஒரு பெண்ணோடு தொடர்புகளை ஏற்படுத்தி, அவரைப் பாசறைகளுக்கும் அழைத்து வந்து முறைகேடான தொடர்புகளில் ஈடுபடலானார். இது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இயக்கத்தின் இறுக்கமான கட்டுக் கோப்பைப் பேணுமுகமாக அவரை இயக்கத்தைவிட்டு வெளியேற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தைவிட்டு வெளியேறுபவர்கள் - வேறு இயக்கங்களை ஆரம்பிக்கக்கூடாது என்ற நிபந்தனையை ஏற்றே இவர் இயக்கத்தில் சேர்க்கப்பட்டார். உமாமகேஸ்வரன் இவற்றை மீறி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கினார்.

அத்தோடு மாணிக்கதாசன், சுந்தரம் போன்ற பலரைத் தன்னோடு இணைத்துக் கொண்டு, அப்பாவிப் பொது மக்களைக் கொலை செய்தல், கொள்ளையடித்தல், களவு, அபகரிப்புக்கள் போன்ற அடாவடித் தனங்களிலும் ஈடுபடலானார். இவரது இந்த அராஜகங்களுக்கு வெளிநாட்டுச் சக்திகளும் ஊக்கம் கொடுத்தன. இந்த அராஜக சக்திகள் மேலும் விஸ்தரிப்பு பெற்றார்கள். நாகராஜா, வாமதேவன் போன்றவர்களும் உமாமகேஸ்வரனோடு இணைந்தனர். காலகெதியில் மேலும் பல சமுகவிரோதிகளைப் புளொட் மெண்டிஸ், புளொட் மோகன் என்ற பெயர்களில் இணைத்து ஒரு பெரிய இயக்கத்தையே உமாமகேஸ்வரன் உருவாக்கினார்.

இவர்களில் மாணிக்கதாசன் தலையிலான குழு விடுதலைப் போராளிகள் உட்பட 300 இற்கும் மேற்பட்ட தேசபக்தர்களைக் கொன்று குவித்தது. சுந்தரம் என்பவர் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை களவாடிக்கொண்டு சென்று தனிப்பட்ட கொள்ளைகளை நடாத்தினார். வாமதேவன் என்பவர் - 1984 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 6 விடுதலைப் புலிகளைத் துடிக்கத் துடிக்க வெட்டிக்கொலை செய்து, வலிகாமம் மேற்கில் பண்டத்தரிப்பு என்ற இடத்தில் பனிப்புலம் நிச்சாமம் காட்டுப் பகுதியில் புதைத்தார். புளொட் இயக்கத்திற்குச் சேர்ந்த பெண்கள் பலர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு, அவர்கள் கர்ப்பமுற்றபோது, அவர்களைக் கொன்று, கொழும்புத் துறையிலுள்ள துண்டி மயானத்தில் புதைத்தார். அந்தக் காலகட்டத்தில் சிறு குழுவாக இயங்கிய 'ரெலோ' என்ற அமைப்பின் உறுப்பினர்களைப் பாண்டியன்குளத்தில் கொன்று புதைத்தார்கள். புளொட் மோகன் என்பவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான போராளிகளின் குடும்பத்தவர்களைக் கொன்று குவித்தார். இப்போது பேரினவாதப் படைகளோடு இணைந்து செயற்படுகிறார். இவர் அண்மையில் மட்டக்களப்பு கிரான் என்ற இடத்தில் கருணாவைச் சந்தித்ததாகச் செய்திகள் அடிபடுகின்றன.

இவர்களோடு றீளாய், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஒரு புளொட் உறுப்பினர்- அளவெட்டியைச் சேர்ந்தவர்களான இறைகுமாரன், உமைகுமாரன் போன்றவர்களை இரவோடு இரவாக்க் கடத்திச் சென்று சுட்டுக் கொலை செய்தார். இது பெரும் இழப்பாக இன்றுவரை கருதப்படுகினறது.

இவற்றை சுட்டிக்காட்டி புளொட் இயக்கத்திற்குள் நியாயம் கேட்டு வாதாடிய முந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் உமாமகேஸ்வரனின் கையாட்களால் படுகொலை செய்யப்பட்டு இந்தியாவில் தஞ்சாவூர் காட்டுக்குள் புதைக்கப்பட்டார்கள்.

இவ்வாறாக உமாமகேஸ்வரனும் அவரது கையாட்களும் தேசத்துரோகச் செயல்களால் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து சிதைக்கப் பகீரதப்பிரயத்தனம் செய்தார்கள். மிகப் பெரிய தேசவிரோத சக்திகள் கற்பாறையாக எழுந்து நின்றபோதும், விடுதலைக் கப்பலை மிகலாவகமாகவும், உறுதியாகவும், துணிச்சலோடும் முன்னோக்கி பிரபாகரன் நகர்த்தினார். அது இன்று தமிழ் மக்களுக்கு நிழல் தரும் பெரிய விருட்சமாக வளர்ந்துள்ளது.

-நாலடியார்-

(தொடரும்)

# ஈராக்கின் பாலுஜா நகரில் மோதல்கள் தொடர்கின்றன!



(பக்தாத்)

ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்கப் படைகளுக்கும், ஈராக்கிய போராளிக் குழுக்களுக்கும் இடையில் மோதல்கள் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் போக்குவரத்துக்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

ஹெலிகளில் இருந்து பீரங்கித் தாக்குதல்களும் ஷெல் தாக்குதல்களும் நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஷியா முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களிலும் மோதல்கள் நடைபெறுவதாகவும் நசரியா நகரில் 15 பேர்வரை கொல்லப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஷியா முஸ்லிம் போராளிகளுடன் நடைபெற்ற மோதல்களில் 12 இற்கு மேற்பட்ட இத்தாலியப் படையினர் காயமடைந்தனர்.

சனி முஸ்லிம்கள் வாழும் பிரதேசத்தில் அமெரிக்கப் படையினரின் போர் நடவடிக்கைகளுக்கு ஷியா முஸ்லிம் போராளிகளினால் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருவதாக பாக்தாத்திலுள்ள பி.பி.சி. செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

சியா முஸ்லிம் மதத் தலைவர் மொக்ராராவின் ஆதரவாளர்கள் 50 பேர், இரு நாட்கள் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது கொல்லப்பட்டனர்.

மதத் தலைவர் மொக்ராராவை கைதுசெய்வதற்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக அமெரிக்கக் கூட்டுப் படையினர் தெரிவித்தனர்.

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்துக்கும் ஜோர்தானுக்கும் இடையிலான பிரதான வீதியும் மூடப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக் தலைநகர் பாகதாத் மற்றும் ஜோர்தான், சிரியா ஆகிய நாடுகளின் எல்லைப் பகுதிகளை உள்ளடக்கியதாக பலூஜா நகர் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பாரிய மனிதப் படுகொலைகளின் பத்தாவது ஆண்டு நினைவுநாள்!

## உகண்டாவில் அனுஷ்டிக்கப்படுகிறது



உகண்டாவில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் ருட்சி இன மக்கள் மீது நடத்தப்பட்ட மனிதப் படுகொலைகளில் 8 லட்சம் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்த மனிதப் படுகொலைகளின் 10 ஆம் ஆண்டு நிறைவுநாள் உகண்டாவில் நினைவு கூரப்படுகிறது.

உகண்டா அரசிற்கு சார்பான குட்டு குழுவினரால் இந்தப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உகண்டாவின் முன்னாள் ஜனாதிபதி யுவேனல் கபியறிமானா பயணம் செய்த விமானம் ரொக்கட் தாக்குலுக்குள்ளாகி விழுந்து நொருங்கியதில் ஜனாதிபதி உயிரிழந்ததை அடுத்தே இந்த மனிதப் படுகொலைகள் இடம்பெற்றன. யூதர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட படுகொலைகளுக்கு சமனாகவே இந்தப் படுகொலைகளும் கருதப்பட்டது.

இதேவேளை, இந்தப் படுகொலைகள் இடம்பெறுவதற்கு பிரான்ஸ் உதவி புரிந்ததாக உகண்டாவின் தற்போதைய பிரதமர் போல் ககமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை இனமான ருட்சி இன மக்களைக் கொல்வதற்கு ஆதாரம் காண்பிப்பதற்காகவே ஜனாதிபதி கபியரி மானா பயணம் செய்த விமானத்தின் மீது ருட்சி போராளிகள் ரொக்கட் தாக்குதலை நடத்தியதாக பிரான்ஸ் நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஆனால், இந்தக் கருத்து தவறானதெனவும் தீவிரவாதப் போக்குடையவாகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் ஜனாதிபதி ககாமி தெரிவித்தார்.

# இஸ்லாமிய தீவிரவாதிகள் எண்மருக்கு ஜோர்தான் நீதிமன்றம் மரணதண்டனை!

ஜோர்தானிய நீதிமன்றத்தால் இஸ்லாமியத் தீவிரவாதிகள் எட்டுப் பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அதிகாரி ஒருவரை கொலை செய்ததற்காகவே இந்த மரணதண்டனை வழங்கப்பட்டுளளது.

லொறன்ஷ் பொலி என்ற அமெரிக்கர், ஜோர்தான் தலைநகர் அம்மானில் 2002 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சர்வதேச அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்த வேளையில் கொல்லப்பட்டிருந்தார்.

இக்கொலையுடன் சம்பந்தப்பட்ட வேறு இருவருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் அல்கொய்டா அமைப்புடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படுகின்றனர்.

# ஐ.நா. அணுசக்தி அமைப்பின் தலைவர் நான்காவது தடவையாக ஈரான் விஜயம்!



ஐக்கிய நாடுகளின் அணுசக்தி அமைப்பின் தலைவர் மொகமட் எல்பராகுடாய் நான்காவது தடவையும் ஈரான் சென்றுள்ளார்.

ஈரானின் அணு ஆயுதத்திட்டங்கள் தொடர்பான முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்வதற்காகவே இந்த விஜயத்தினை அவர் மேற்கொண்டுள்ளார்.

ஈரானுக்கான விஜயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர்,

அணு ஆயுதங்களை தயாரிக்கப் போவதாக ஈரான் தெரிவித்துள்ளது. அத்துடன் சர்வதேச அணுசக்தி அமைப்பிற்கு போதிய ஒத்துழைப்பை அது வழங்கவில்லை.

எனது முன்னைய விஜயங்களின் போது ஈரான் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவில்லை. எனினும் எனது இந்த விஜயத்தின்போது ஈரான் முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வரும் எனத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அணுசக்தி அமைப்பின் தலைவர் ஈரானுக்கான விஜயத்தின்போது இரு பிரச்சினைகளை விவாதிக்க உள்ளார்.

ஈரான் எவ்வாறு தூய்மையான யுரேனியத்தை பெற்றுள்ளது என்பது தொடர்பாகவும் அணுஆயுத உற்பத்திக்கான யுரேனியத்தை பிரித்தெடுக்கும் கருவிகள் தொடர்பாகவுமே பேச்சுவார்த்தையில் ஆராயப்படவுள்ளது.

ஈரானில் அணுசக்தி தொடர்பான இரகசியத் தொடர்புகள் இல்லை என்பதை உறுதிப்படுத்தவும் சர்வதேச நாடுகளும் தானும் இப்பிரச்சினைக்கு ஒரு முடிவைக்காண விரும்புவதாகவும் அணுசக்தி அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

ஈரான் யுரேனியத்தை உற்பத்தி செய்யும் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கப்போவதாக அண்மையில் தெரிவித்திருந்ததன் பின்னர் இவரது இந்த விஜயம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொங்கொங் அரசியலமைப்பை மாற்ற சீனாவின் அங்கீகாரம் பெறவேண்டும்!

கொங்கொங்கில் தலைவர்களும், சட்டசபை அங்கத்தவர்களும் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதற்கான 'வீட்டோ' அதிகாரங்களை சீனாவின் நாடாளுமன்றம் அண்மையில் தீர்மானித்திருந்தது.

கொங்கொங்கில் ஜனநாயகத்திற்கு சார்புடையவர்கள் இக்கருத்து கொங்கொங்கில் தன்னாட்சியை அவமதிப்பதாக அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். கொங்கொங் தனது அரசியல் சட்டங்களை 2007 இல் மாற்றியமைக்கலாமெனவும் ஆனால் சீனாவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் சீனாவின் நாடாளுமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன் மூலம் கொங்கொங்கில் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான சாத்தியங்களைக் கட்டுப்படுத்த முயல்வதாக கொங்கொங்கின் ஜனநாயகத்திற்கான அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொங்கொங்கின் ஜனநாயகக் கட்சி ஆதரவாளர் 'ஜேம்ஷ்டூ' தெரிவித்த கருத்தில் இந்தத் தீர்மானம் சட்டவிரோதமானது எனவும் அவை கொங்கொங்கின் அடிப்படைச் சட்டங்களுக்கு முரணானது எனவும் தெவித்தார்.

கூடுதலான ஜனநாயக உரிமைகள் தொடர்பாக கோரிக்கைகள் விடுத்து 7000 வரையான மக்கள் கொங்கொங் நாடாளுமன்றத்தின் முன் ஒன்று கூடியிருந்தனர்.

# பா.ம.கட்சிக்கு எதிராக ரஜினியின் முடிவு சரியானது

## பா.ஜ.க. செயலர் இல.கணேசன் தெரிவிப்பு

நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் அ.தி.முக., பாரதீய ஜனதா வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக பாரதீய ஜனதா பொதுச் செயலாளர் இல கணேசன் நேற்று நெய்வேலி வந்தார். அங்கு அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

ரஜினிகாந்த் எந்த ஒரு முடிவை எடுத்தாலும் தீர ஆலோசித்து சிந்தித்து முடிவெடுக்கக்கூடியவர். என்னுடைய நெருங்கிய நண்பர். அவரே 6 தொகுதிகளில் பா.ம.கவுக்கு எதிராக முடிவெடுத்துள்ளார் என்றால் பா.ம.க எந்தளவுக்கு அநீதி இழைத்

உலக நோக்கு

துள்ளது என்பதை மக்கள் அறிவர்.

அண்மையில் மதுரையில் ரஜினிகாந்த் ரசிகர்கள் பா.ம.கவினரால் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். அரசியல் நாகரிகம் தெரியாமல் அவர்கள் நடந்துகொண்டவிதம் வன்மையாக கண்டிக்கத்தக்கது. ரஜினிகாந்த் ஆன்மீகவாதி. மக்கள் அவர் மீது பற்றுதல் வைத்துள்ளனர்.

ரஜினி ரசிகர்கள் பாமரர்கள், கட்சி அமைப்பைச் சேராதவர்கள். ஆனால் பா.ம.கவினர் ஒரு கட்சியின் அமைப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களே அநாகரிகமான முறையில் நடந்துகொள்ளும் போது பாமர ரஜினி ரசிகர்கள் வெகுந்து எழுவதில் என்ன தவறுள்ளது?

ஜனநாயக நாட்டில் கறுப்புக்கொடி காட்டுவதற்கு எவருக்கும் உரிமையுள்ளது. ஆனால் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் அரசியல் ஜனநாயகம் இன்றி பா.ம.க செயற்பட்டு வருகிறது.

இந்தத் தொகுதியை பொறுத்த வரையில் பாரதீய ஜனதாவுக்கு வெற்றிவாய்ப்பு பிரகாசமாக உள்ளது. சேதுசமுத்திர திட்டம், நான் பள்ளிமாணவனாக இருக்கும்போதே அறிந்த திட்டம். பிரதமர் வாஜ்பாயும், வைகோவும் இந்தத் திட்டத்துக்கு ஆதரவாக குரல் கொடுத்த போது அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி இதை எதிர்த்தார். ஆனால் இப்போதோ சேது சமுத்திரத் திட்டத்துக்கு அவர்கள் முக்கிய காரணம் என்று காங்கிரஸ்"டன் கூட்டணி வைத்துள்ளார்.

எதையும் வைகோ முதலில் செய்வதாக அவர் மார்தட்டிக்கொள்வார்.

எங்கள் ஆட்சியின்போது 20 சதவீத மக்கள்தான் தன்னிறைவு பெற்றுள்ளனர் என்று ப.சிதம்பரம் கூறியுள்ளார். ஆனால் காங்கிரஸ் ஆட்சியில் இந்த 20 சதவீத மக்கள் கூட தன்னிறைவு பெறவில்லையே.

எங்கள் ஆட்சி மீண்டும் தொடரும் பட்சத்தில் நிச்சயமாக 80 சதவீத மக்கள் தன்னிறைவு பெறுவர்.

அ.தி.மு.க. - பா.ஜனதா கூட்டணியை ஆதரித்து பிரதமர் வாஜ்பாய் தமிழகத்தில் தேர்தல் பிரசாரம் செய்வார். அவருடன் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் இணைந்து ஒரே மேடையில் பேச வாய்ப்புள்ளது என்றார்.

இந்த பந்திரிகையாளர் சந்திப் பின்போது, மாநில தேர்தல் பணிக் குழு பொறுப்பாளர் ரகுசுந்தரராமன், சிதம்பரம் தொகுதி வேட்பாளர் தடா. பெரியசாமி மற்றும் பா.ஜ.க நகர செயலாளர் முத்துராமலிங்கம், அ.தி.மு.க. நகர செயலாளர் ரவிச்சந்திரன், அண்ணா தொழிலாளர் ஊழியர் சஙக செயலாளர் ராம உதயகுமார் மற்றும் முன்னணி பாரதீய ஜனதா அ.தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம் தீவிரவாதிகளை ஒடுக்க படையினரை அனுப்புவது குறித்து அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது!

## ஆப்கானுக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு



பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம் தீவிரவாதிகளுக்கெதிரான போர் நடவடிக்கைகளை மேறகொளவதற்காக அமெரிக்கப் படையினரை அந்நாட்டிறகு அனுப்புவது குறித்து அமெரிக்கா ஆராய்ந்து வருகின்றது என ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கத் தூதுவர் கலில்சார்ட் தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதுவரின் இந்த அறிவிப்பை பாகிஸ்தான் கண்டித்துள்ளது.

பாகிஸ்தான் தகவல் அமைச்சர் 'செயிக் அகமட் ரசீட்' இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போது,

முஸ்லீம் திவிரவாதிகளின் பிரச்சினைகளுக்கு பாகிஸ்தான் படையினரால் தீர்வு காணமுடியும்.

தூதுவர் கலில்சார்ட்டிற்கு பாகிஸ்தானின் உள்நாட்டு நிலைமை புரியவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை, வெளிநாட்டுப் படையினரை பாகிஸ்தான் மண்ணில் அனுமதிக்கப் போவதில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதுவர் 'கலில்சார்ட்' கருத்துத் தெரிவிக்கையில் -

தீவிரவாதிகளின் சரணாலயமாக பாகிஸ்தான் அமைவதை அனுமதிக்கப் போவதில்லை. தீவிரவாதிகளின் பிரச்சினையை அவர்கள் தீர்க்க வேண்டும் அல்லது அமெரிக்கா தீர்ப்பதற்கு முயற்சிக்கும் என பாகிஸ்தான் தலைவர்களிடம் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்தக் கருத்துக்களுக்குப் பதிலளித்த பாகிஸ்தான் தகவல் அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில் -

தீவிரவாதிகளுடன் போரிடும் ஆற்றல் பாகிஸ்தான் படையினருக்கு உணடு. இதற்காக அவர்கள் பல உயிர்த் தியாகங்களை மேற்கொண்டுள்ளனர். அமெரிக்கத் தூதுவரின் கருத்துக்கள் உள்நாட்டில் பல அரசியல் பிரச்சினைகளுக்கு காரணமாக அமையலாமெனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மக்கள் பிரச்சினையை தீர்க்கும் அரசுடன் இணையவே விருப்பம்!

## ஆறுமுகன் தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

மலையக மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் அவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு தரக்கூடிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட விருப்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிலைப்பாட்டை தெரிவிப்பதற்காக நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது -

மலையக மக்களின் கல்வி, வீடமைப்பு, வேலைவாய்ப்பு மற்றும் காணிப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முன்வரும் அரசாங்கத்துடனேயே இணைந்து செயற்பட விரும்புகின்றோம்.

மக்கள் விடுதலை முன்னணி மீது நம்பிக்கை வைத்தே மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கு வாக்களித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இருந்தே ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் மீது மக்கள் நம்பிக்கையை இழந்து மக்கள் விடுதலை முன்னணியைத் தெரிவு செய்துள்ளனர்.

எந்தக் கட்சியுடனும் நான் வலியச் சென்று இணையப் போவதில்லை என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் தான் பேரம் பேசி வருவதாகத் தெரிவிக்கும் கருத்துக்கும் அவர் மறுப்புத் தெரிவிததார்.

# ஐ.தே.மு தோல்விக்கு ரணில் பொறுப்பேற்பு!

(கொழும்பு)

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி தோல்வியடைந்தமைக்கான பொறுப்பை தான் ஏற்றுக்கொள்வதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் நடைபெற்ற ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐ.தே.முன்னணி தோல்வியடைந்தமை எதிர்பார்க்கப்படாத ஒரு விடயம். இந்தத் தோல்விக்கான அனைத்துப் பொறுப்புக்களையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

நடந்துமுடிந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி என்ன செய்யவேண்டும் என்பது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளேன். அத்துடன் உறுப்பினர்கள் எடுக்கும் எந்தத் தீர்மானத்துக்கும் தாம் தலைவணங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவும், உடந்தையாகவும் செயற்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற நன்மை தீமைகளை அவதானித்து சரியான தீர்க்கதரிசனமான பயணத்தை முன்னெடுப்பது என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (01)

# இடம்பெயர்ந்தோருக்கு 5 மில்லியன் ஒதுக்கீடு!

## ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

வடக்கு - கிழக்கில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கென ஐரோப்பிய ஒன்றியம் 5 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களை குடியமர்த்தல், சுகாதாரம் மற்றும் வாழ்க்கைத்தரத்தை அபிவிருத்தி செய்தல போன்றவர்களுக்கு பயன்படுத்த இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

1983 முதல் 2002 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக சுமார் 60 லட்சம் மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்ததாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

# எம்.பிக்களின் பெயர்கள் வர்த்தமானியில் பிரசுரம்

(கொழும்பு)

13 ஆவது நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலை நேற்று அரச அச்சகர் தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைத்துள்ளதாக உதவி தேர்தல் ஆணையாளர் சே.சேனநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை அரசியல் கட்சிகளுக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை முன்மொழிவதற்கு ஒரு வாரகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (01)

# மட்டக்களப்பில் துப்பாக்கி சூடு ஒருவர் பலி, மற்றொருவர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்ட இளைஞர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இருப்பினும் அவரது சட்டைப் பைக்குள் காணப்பட்ட ஆவணமொன்றில் எல்.பிரேம்குமார் என்று எழுதப்பட்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

வாகனம் ஒன்றில் வந்த இளைஞர் குழுவொன்றுக்கும் குறிப்பிட்ட இளைஞர்களுக்குமிடையில் மோதல் ஒன்று இடம்பெற்றதாகவும் அந்த மோதலின்போதே இரு தரப்பினருக்கும் இடையில் துப்பாக்கி சூடு இடம்பெற்றிருக்கலாம் எனவும் தெரியவருகிறது.

# விகாரையின் பெயர்ப்பலகை மக்களால் தீயிட்டு எரிப்பு!

## கந்தரோடையில் சம்பவம்

சுன்னாகம் - கந்தரோடைப் பகுதியில் இராணுவத்தினரால் நாட்டப்பட்டிருந்த புத்த விகாரைக்கான பெயர்ப் பலகை அப்பகுதி மக்களால் நேறறு முன்தினம் இரவு தீயிட்டு எரிக்கப் பட்டது.

சுன்னாகம் - கந்தரோடைப் பகுதியில் காணப்படும் புராதன வரலாற்று சான்றுகளையுடைய பகுதிகளை பௌத்தர்கள் தமக்குச் சொந்தமான பகுதி என, பலகாலமாகவே கருதி வருகின்றனர்.

இதனடிப்படையில் கடந்த வருடம், அப்பகுதியில் பௌத்த விகாரைக்குரிய இடமாக ஒரு பிரதேசத்தை பிரகடனப்படுத்திய இராணுவத்தினர், அங்குள்ள ஓர் அரச மரத்தை பௌத்த சின்னமாகக் கூறியதுடன் - அவ்விடத்தில் விகாரைக்கான பெயர்ப்பலகை ஒன்றையும் நாட்டியிருந்தனர்.

இதனை அப்பகுதி மக்கள் எதிர்த்ததுடன் - ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியிருந்தனர். அதனையும் பொருட்படுத்தாது பொலிஸ் காவலுடன் அந்தப் பகுதியில் விகாரை கட்டுவதற்கான அடிக்கற்களும் நாட்டப்பட்டன. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு, அப்பகுதிச் சென்ற பொது மக்கள் சிலர், அங்கு நாட்டப்பட்டிருந்த விகாரைக்குரிய பெயர்ப் பலகையை எரித்தனர் எனத் தெரிய வருகின்றது. (ப)

## பதினெட்டாவது...

பிரதமராக பதவியேற்க முடியாதென சுதந்திரக் கட்சியிலுள்ள பலர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

எனினும் மகிந்த ராஜபக்ஷ, அனுரா பண்டாரநாயக்க ஆகிய இருவரையும் பிரதமராக நியமிப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டதை அடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (01)

# புதிய அமைச்சரவை பதவியேற்பு ஓரிரு தினங்களில் நடைபெறும்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சரவை நாளை அல்லது நாளை மறுதினம் பதவியேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக அமைக்கப்படவுள்ள இந்த அமைச்சரவையில் 35 பேரே இடம்பெறுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் அமைச்சரவையை 35 ஆக மட்டுப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

நாளை, அல்லது நாளை மறுதினம் இந்த அமைச்சர்களும் பதவியேற்கவுள்ளனர்.

இந்நிலையில் நான்கு அமைச்சுகள் தொடர்பான விபரங்களை ஜே.வி.பி. வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடதக்கது.

## தேர்தலுக்குப் பின்னரான வன்செயல்கள் 99 ஆக அதிகரிப்பு

நடைபெற்று முடிந்த தேர்தலின் பின்னர், இடம்பெற்றதாகக் கூறப்படும், வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை 99 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை 6.00 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 11 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை - தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து நேற்று வரை 1509 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இவற்றில் குற்றவியல் சட்டதகை மீறியதாக 1097 முறைப்பாடுகளும், தேர்தல் தொடர்பாக 412 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அம்பாறையில் 174 வன்முறைச் சம்பவங்களும், அனுராதபுரத்தில் 102 தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் மாத்தறையில் 100 வன்முறைச் சம்பவங்களும் கம்பஹாவில் 84 தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என தெரியவருகிறது.

## புதிய..

இலங்கையில் மேற்கொள்ளப் போகும் நடவடிக்கைகள் முதலியன குறித்தும் இலங்கைக்கான இந்தியாவின் ஆதரவு குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (01)

## அமைச்சு விபரங்களை...

அமைச்சராக விஜித ஹேரத்தும், கிராமிய பொருளாதார புனர்நிர்மாண அமைச்சராக லால்கந்தவும் நியமிக்கப்படவுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்தது.

இந்த அமைச்சுக்களுக்குப் பிரதி அமைச்சர்களாக நிலவளம் விவசாய அமைச்சிற்கு பிமால் ரட்ணாயக்கவும், மீன்பிடி கடல் வளத்திற்கு நிஹால் கலப்பதியும் கலாசார அமைச்சிற்கு சமந்த விஜேரட்ணவும் கிராமிய பொருளாதார புனர்நிர்மாணத்திற்கு சுனில் ஹன்டுநட்டியும் நியமிக்கப்படவுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் முக்கிய தலைவர்களான விமல் வீரவன்ச மற்றும் நந்த குணதிலக இருவரும் அமைக்கப்படவுள்ள அமைச்சரவையில் இடம்பெறமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விருப்பு வாக்குகளின் தெரிவு உட்பட 41 ஆசனங்களைப் பெற்றுள்ள ஜே.வி.பியினர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டமைப்பில் முக்கிய அங்கம் வகிப்பதால் அமைச்சுப் பொறுப்புக்களில் அவர்களுடன் பேரம்பேசுவது முடியாத காரியம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இனப்பிரச்சினைக்கான தீர்வு...

திரத்தின் அளவைப் போன்ற பாத்திரத்தை இந்தியா வகிக்க வேண்டும் என்று, நான் கூறவில்லை. இந்தியா எந்த வகையில் சாதகமான முறையில் பங்களிப்பினைச் செய்ய முடியுமோ, அவ்வாறு அவர்கள் செய்யலாம்.

தற்போது இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகளில் எந்த வகையிலேனும் இந்தியா சம்பந்தப்படும் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

இதேவேளை - 2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி - விடுதலைப் புலிகள் மீண்டும் போருக்குத் திரும்புவார்கள் என, நான் ஒருபோதும் நினைக்கவில்லை. அத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தை தற்போது நடைபெறும் வேளையில், போர் ஆரம்பிக்கும் எனவும் நான் கருதவில்லை.

வெகுவிரைவில் மீளவும் ஒரு தேர்தல் வருமென ரணில் விக்கிரமசிங்க கூறியதை நான் நிராகரிக்கின்றேன். சிறுபான்மை அரசொன்றை அமைப்பதே எமது முதற்பணி ஆகும். அதன் பின்னர் இதர கட்சிகளுடன் நாம் பேசுவோம். எமது அரசாங்கத்துக்கு எவ்வித பிரச்சினையும் வராது. அடுத்துவரும் ஒரு வருடத்துக்கு எந்தவொரு தேர்தலும் நடைபெறாது என, நான் உறுதியாகத் தெரிவிக்கின்றேன் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

இதேவேளை - பிரதமர் ராஜபக்ஷவின் இந்தியா தொடர்பான நிலைப்பாடு எதுவும் தமக்கு உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை எனவும், அவ்வாறு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பாக தம்மால் கருத்துத் தெரிவிக்க முடியும் என, கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை...

தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மலையக மக்களின் பிரச்சினைக்கும் குரல் கொடுக்கின்ற நாடாளுமன்ற அங்கத்தவர்களாகச் செயற்படவேண்டும் என்பதை மலையக மக்கள் முன்னணியின் சார்பாக முன்வைத்தேன்.

அரசியற்துறைப் பொறுப்பாளர் அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுள்ளார்.

மலையக மக்களின் பிரச்சினைக்காக மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாமல். வடக்கு-கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து குரல் கொடுக்கின்ற ஓர் அரசியல் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

மலையகத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள், அரசியல் உரிமையில் பின்தங்கி வாழ்கின்ற ஒரு மக்கள் கூட்டம். ஆகவே அவர்களுக்காக குரல் கொடுக்கின்ற மனிதாபிமான கண்ணோட்டம் இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

அதேபோல வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்காக மலையக மக்களும் குரல் கொடுக்கின்ற ஓர் நிலைமை ஏற்படவேண்டும். அதனை நாம் கட்டியெழுப்ப வேண்டும் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வெற்றியை நாம் பாராட்டுகின்றோம். வழக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் பயமுறுத்தலில் தான் மக்களை அடக்கி வைத்திருகின்றார்கள் என்று சொல்லப்பட்டது.

ஆயுதங்களை கையில் வைத்திருப்பதால் மக்கள் வாய் திறக்க முடியாமல் அடங்கிப்போகின்றார்கள் என்றெல்லாம் விமர்சிக்கப்பட்டது. ஆனால் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் தமது கருத்தை சுதந்திரமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

எந்தவிதமான அச்சுறுத்தல் இல்லாமல் அனைத்து மக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை - அவர்களது கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருப்பதை நிரூபிதத்திருக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எந்தளவிற்கு ஒத்துழைப்பார்கள் என்பதை விட பொதுஜன முன்னணி - ஜே.வி.பி கூட்டும் நீடிக்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது என நான் நினைக்கின்றேன். அவர்களுக்கிடையில் ஓர் கருத்தொற்றுமையில் ஆட்சியில் அமைதியாக, ஸ்திரமான ஆட்சியாக முன்னெடுக்க முடியாது என நாம் கருதுகிறோம்.

தற்போதைய நிலையில் எவருடனும் இணைவதில்லை. ஆனால் தமிழர் கூட்டமைப்புடன் ஓர் புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொண்டு செயற்படவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

தென்னிலங்கையிலுள்ள எந்தக் கட்சியையும் நாம் ஆதரிக்கவில்லை.

விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேசுவதாக இருந்தால் அதற்கு உடன்பாடில்லை என மிக அண்மையில் கூட ஜே.வி.பியினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இப்படிப்பட்ட அந்த ஜே.வி.பியுடன் இணைந்திருக்கின்ற கூட்டமைப்போடு அரசியல் செய்வதென்ற பேச்சுக்கே இடமில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியோடு நாங்கள் பேசிப் பார்க்கலாம் பேச்சுவார்த்தையை முன்னெடுத்து செல்வதற்கு எந்த அளவிற்கு வாய்ப்புக்கள் உள்ளது.

அதில் அவர்கள் எவ்வளவு உறுதியாகவுள்ளார்கள் என்பதை கேட்டு முடிவிற்கு வரலாம் எனத் தெரிவித்தார்.